பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி 15 வெள்ளிக்கிழமை 29.06.2018 | கதிர் 235

## ரூ.20 கோடி செலவில் மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணி

யாழ்.மயிலிட்டித் துறைமுகம் சுமார் இருபது கோடி ரூபா செலவில் ஆழப்படுத்தப்பட்டு நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் (யூ.என்.டி.பி.) மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு ஆகியன பக்கம் 14

# மாகாணத் தேர்தலுக்கு ஆணைக்குழு காலக்கெடு


## ஜூலை 31இற்குள் சட்டம் வராவிடில் தன்பாட்டில் முடிவு எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான சட்டங்களை ஜூலை 31 இற்கு முன்னர் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். தவறினால் இவ்விடயத்தில் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தித் தேர்தல் ஆணையம் தனது தீர்மானங் களை எடுத்து நடைமுறைப்படுத்தும்.

-இவ்வாறான காட்டமான செய்தி ஒன்றைத் தேர்தல் ஆணையம், சபாநாயகர் மூலமாக அரசுத் தரப்புக்கு நேற்றுத் தெரியப்படுத்தியதாக அறிய வந்தது. பக்கம் 14

### இனி இது ரகசியம் அல்ல!



ஒவ்வொரு நாளும் வடக்கு அரசியல் பற்றியே எழுதுகின்றீர்கள். தெற்குக் குறித்து ஏதும் கூறமாட்டீர்களா என்று அன்பர் ஒருவர் அடிக்கடி கேட்கின்றார். இது அவரது விருப்பத்தை நிறைவு செய்யும் தகவல்.

அடுத்த ஆண்டு இறுதியில் நடை பக்கம் 03

### சிறுமி படுகொலையைக் கண்டித்து

# சுழிபுரத்தில் ஆர்ப்பாட்டம்

## இன்று பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு







- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் கொலை செய்யப்பட்ட ஆறு வயது சிறுமியான றெஜீனாவுக்கு நீதி கோரியும் இந் நடவடிக்கைக்கு அனைத்து மக்களும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் அக் கிராம மக்களால் நேற்றுக் காலை பக்கம் 14

## வாள்வெட்டுக்குழு நேற்றும் மானிப்பாயில் அட்டகாசம்



- எஸ்.நிதர்ஷன் -

மானிப்பாய், லோட்டன் வீதி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீட்டுக்குள் நேற்று வியாழக்கிழமை காலை புகுந்த கும்பல், பெற்றோல் பக்கம் 03

## மானிப்பாயில் வயோதிபப் பெண் கழுத்து வெட்டிப் படுகொலை

### பிச்சைக்காரர் புரிந்த கொடூரம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்.மானிப்பாய் கல்லூரி ஒழுங்கையில் உள்ள வீட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணிபுரியும் 60 வயது வயோதிபப் பெண் ஒருவர் நேற்று வியாழக் கிழமை காலை கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அங்கு பிச்சை எடுப்பவர் போல் பாசாங்கு செய்து கொண்டு வந்த நபரினாலேயே இக் கொடூரக் கொலை சம்பவம் அரங்கேற்றப் பக்கம் 14

## சந்தியாவிற்கு அச்சுறுத்தல்; மன்னிப்புச்சபை கவலை!

சந்தியா எக்னலிகொடவிற்கு மரண அச்சுறுத்தல் விடுப்பவர்களிற்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. பக்கம் 14




# யாழ். பல்கலை மாணவரும் நேற்று ஆர்ப்பாட்டம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்.சுழிபுரத்தில் 6 வயது சிறுமி கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் நேற்றுக் காலை கண்டன ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன் போது மாணவர்கள் பலாலி வீதியை மறித்துப் போராட்டத்தை நடத்தியமையால் அப்பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன், அப்பகுதி பக்கம் 03



# இலங்கையின் மூத்த குடி தமிழர்களே! சிங்களவர் அல்லர் என்கிறார் விக்கி

"இலங்கையின் மூத்த குடியினர் தமிழர்களே. சிங்களப் பேராசிரியர்கள் கூறுகின்றமை போல சிங்களவர்கள் அல்லர்"

– இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தாம் வாராந்தம் அனுப்பும் கேள்வி – பதில் விடயத்திலேயே இந்த விவரத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

'வாரத்துக்கொரு கேள்வி' என்ற தலைப்பில் அவர் இது தொடர்பாக அனுப்பிவைத்த விவரங்கள் வருமாறு:-

இவ் வாரக் கேள்வி வரலாறு சம்பந்தப் பட்டது. எனினும் கேள்வி கேட்டவர் சற்று தடுமாற்றத்துடன் தான் கேள்வியைக் கேட்டுள்ளார். பக்கம் 04

## ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனில் வடக்கில் 2 மீன்பிடித் துறைமுகங்கள்

### 2,500 கோடி ரூபா செலவில்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கில் இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 15 கோடி 80 லட்சம் டொலர் (சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா) கடனுதவி பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# மிகவும் சிறப்பாக நேற்று நடைபெற்ற பாண்டியன்குளம் ம.வி. பொன்விழா



முல்லைத்தீவு - பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வு நேற்றுக் காலை ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வில் முதல் அமர்வு நேற்று முற்பகல்10 மணிக்கு பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு இப்பாடசாலையின் பழைய மாணவரும் வடமாகாண சபை உறுப்பினருமான சு.பசுபதிப்பிள்ளையின் நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திரைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து பாடசாலையின் பழைய மாணவனும் கிராம அலுவலருமான திரு.சுந்தரலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால அமைக்கப்பட்ட பொன்விழா நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவீந்திரன் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் திரு.சு.திருஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபையின் சிறுவர் மகளிர் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து நிகழ்வில் பொன்விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டுபாடசாலையில் ஆரம்பகாலம் தொடக்கம் தற்போது வரை சேவையாற்றி வரும் அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி அப்போதைய அதிபர் வாதித்தம்பி அவர்களால் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை தொடர்ந்து மகிழ்ச்சிப் போக்கைக் கண்டு தற்போது வடமாகாணத்தில் சாதனை படைத்த ஒரு பாடசாலையாக காணப்படுகின்றது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் 1999ஆம் ஆண்டு மற்றும் 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் இயங்கிய பாடசாலை கடந்த 2010ஆம் ஆண்டு முதல் சொந்த இடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை மாணவர்கள் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# கொழும்பு துறைமுக நகர நிலப்பரப்பை உருவாக்கும் பணி இறுதிக்கட்டத்தில்!



கொழும்பு துறைமுக நகருக்கான நிலப்பகுதியை, கடலில் இருந்து உருவாக்கும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என துறைமுக நகரக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது முழு வீச்சில் நிலத்தை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப்பணிகள் அடுத்த ஆண்டு நிறைவடையும் என்று சீன நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# குதிரைகளுடன் இலங்கை வந்தார் பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி!



பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவரான ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், நான்கு நாள்கள் விஜயமாக நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தார்.

அவரை இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து, முக்கியமாக, பயிற்சி மற்றும் இராணுவ ஒத்திகைகள் தொடர்பாக ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சபுகஸ்கந்தையில் உள்ள பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரியில், விரிவுரை ஒன்றையும் அவர் நிகழ்த்தவுள்ளார்.

இலங்கை விமானப்படைக்கு, ஆறு குதிரைகளையும் ஜெனரல் ஹயட், அதிகாரபூர்வமாக கையளிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதார போசாக்கு கண்காட்சியும், நலமுரசு சஞ்சிகை வெளியீடும்






கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அனுசரணையில் போசாக்கு கண்காட்சியும் நலமுரசு சஞ்சிகை வெளியீடும் நேற்று இடம்பெற்றன.

நேற்றைய தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நலமுரசு சஞ்சிகை வெளியீடும் போசாக்கு கண்காட்சியும் இடம்பெற்றன. உடல் ஆரோக்கியத்திற்கான உணவு முறைகள் உணவுகள் என்பன கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியை மாணவர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டு பார்வையிட்டு வருகின்றனர்.

அத்தோடு, நலமுரசு சஞ்சிகை வெளியீட்டினை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் குமாரவேல் வெளியிட்டு வைக்க வடமாகாண சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் மருத்துவர் திலீபன் மற்றும் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.


இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மைதிலி, மலேரியா தடை இயக் கத்தின் பொறுப்பு மருத்துவர் ஜெய ராசா, மருத்துவர் சுகந்தன், மற்றும் சுகாதார திணைக்களப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# யாழ். கம்பன் விழா நாளை காலை, மாலை அமர்வுகளாக!

## சிறப்பு நிகழ்வாக பட்டிமண்டபமும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

அகில இலங்கை கம்பன் கழகம் யாழ்ப்பாணத்தில் நடத்தும் இவ்வாண்டுக்கான கம்பன் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை நிகழ்ச்சியாக ஆரம்பித்து நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.



இன்றைய ஆரம்பநிகழ்வில் சிறப்பு நிகழ்வாக 'ஊழின் பெரு வலியைப் பெரிதும் உணர்த்தும் தலைமைப் பாத்திரம் எனும் தகுதி...' எனும் பொருளில் இலக்கிய ஆணைக்குழு இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை காலை நிகழ்வுகள் 9.30 மணிக்கு பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த எஸ். பாலசிங்கம் மங்கல விளக்கேற்ற திருமதி பி.ஹம்ஸத்வனி கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகும்.

தலைமையுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் தொடக்கவுரையை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றுவர்.

தொடர்ந்து கவியரங்கம் கவிஞர் சோ.பத்மநாதனின் தலைமையில் 'நாடுயரக் கம்பன் நமக்கீயும் நல்வழிகள்' எனும் தலைப்பில் இடம்பெறும். கவியரங்கத்தை அடுத்து உரையரங்கம் இடம்பெறும்.

'இலக்கியச் சுடர்' த.இராமலிங்கம் தலைமையில் 'படித்ததும் ரசித்ததும்' எனும் பொருளில் நடைபெறும்.

மாலை நிகழ்வு 4.30 மணிக்கு வி.சித்தார்த்தன், வி.பிரதித்தன் குழுவினரின் மங்கல இசை முழங்க, யாழ். மருத்துவ பீடத்தின் வைத்திய நிபுணர் எஸ். பிரேமகிருஷ்ண தம்பதியர் மங்கல விளக்கேற்ற ம.தயாபரனின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகும்.

தலைமையுரையை வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் தொடக்கவுரையை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் நிகழ்த்துவர்.

அதைத் தொடர்ந்து தவில்வித்தவான் ஆர். புண்ணியமூர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்.

அடுத்த நிகழ்வாகப் பட்டி மன்றம் "கற்றோர் நெஞ்சைப் பெரிதும் கலங்கச் செய்யும் உரையாடல் எது?" எனும் பொருளில் இடம்பெறும்.

'கைகேயி - தசரதன் உரையாடலே!' என்ற தரப்பில் திருநந்தகுமார், ஆறு திருமுருகன் ஆகியோரும், 'கோசலை - பரதன் உரையாடலே!' என்ற தரப்பில் த. இராமலிங்கம், ந.விஜயசுந்தரம் ஆகியோரும், 'வீடணன் - கும்பகர்ணன் உரையாடலே!' என்ற தரப்பில் இரா. செல்வவடிவேல், ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோரும் வாதிடுவர்.

இந்த பட்டிமண்டப நடுவராக 'கம்பவாரிதி' இ. ஜெயராஜா செயற்படுவார்.

(இ

காலைக்கதிர்
Kalaikkathir

வெள்ளிக்கிழமை 29.06.2018 

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெறும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட் பாளர் யார் என்ற கேள்வியினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்குள் குழப்பம் என்று தெற்கில் அடிக்கடி செய்தி வெளியாகி வருகின்றமை தெரிந்ததே.

அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னொரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் நிற்க முடியாது. அந்தப் பதவிக்குத் தமது வேட்பாளராக யாரை அவர் நிறுத்தப் போகின்றார் என்பதுதான் 'சகோதரர்கள் சண்டை'க்குக் காரணம் என்கின்றன தென்னிலங்கைச் செய்திகள்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் போது மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷக்கு வயது 80 ஆகிவிடும். தென்னிலங்கையில் அவர் அவ்வளவு கவர்ச்சிகரமான தலைவரும் அல்லர்.

அறுபது வயதில் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பிடுகையில் இவர் வயோதிபர்.

அடுத்தவர் மஹிந்தர். அவருக்கு இப்போது வயது 73. அவருக்கு அடுத்தவர் யார் தெரியுமா?

தோற்றத்தைப் பார்த்து – கோட்டாபயவின் வெள்ளைத் தலையையும், பஸில் ராஜபக்ஷவின் 'டை' அடித்த கறுப்புத் தலை மற்றும் இளமைத் தோற்றத்தையும் வைத்துக் கொண்டு– கோட்டாதான் மூத்தவர் என்று நினைக்கின்றோம். அது தவறு.

பஸில் ராஜபக்ஷதான் மூத்தவர். அவருக்கு வயது 71. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் 72யைத் தாண்டியிருப்பார்.

கடைக்குட்டிதான் கோட்டாபய. அவருக்கு இப்போது வயது 69. கடந்த 20 ஆம் திகதிதான் பிறந்த நாள் கொண்டாடினார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் சமயம் கோட்டாவுக்கு வயது 70 ஆக இருக்கும். அந்தத் தேர்தலில் களம் இறங்கக்கூடிய மற்றொரு வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்போது வயது 70 ஆகத்தான் இருக்கும். இருவரும் சமவயதுக்காரர்கள்.

இந்த நல்லாட்சி அரசு பதவிக்கு வர முன்னர் இருந்த அரசமைப்பு ஏற்பாடுகளின்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 30 தான். ஆனால் இனிவரும் தேர்தல்களில் ராஜபக்ஷ குடும்பம் தலையெடுக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, நல்லாட்சி அரசு 19 ஆவது திருத்தம் மூலம் மூன்று ஆப்புக்கள் சொருகியது.

முதலாவது – ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் நிற்க முடியாது என்பது. அது மஹிந்தருக்கு வைத்த ஆப்பு.

அடுத்தது– ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 30 இலிருந்து 35 ஆக உயர்த்தப்பட்டது. இது மகன் நாமல் ராஜபக்ஷக்கு வைக்கப்பட்ட ஆப்பு. இனி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதானால் 2021 ஏப்ரல் வரை நாமல் காத்திருக்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் அத்தகைய ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட வயது 35 ஐத் தாண்டும்.

மூன்றாவது – இரட்டைப்பிராஜவுரிமை உடையோர் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்ற ஆப்பு. இது கோட்டாவுக்கும், பஸிலுக்கும் சேர்த்து இறுக்கப்பட்ட ஆப்பு என்றாலும், பஸில் மயிரிழையில் தப்பிவிட்டார். அவர் வைத்திருப்பது அமெரிக்கப்பிராஜவுரிமை அல்ல. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போல அமெரிக்காவின் பச்சை அட்டை அனுமதிதான்.

சரி. இப்போது கோட்டாபய, பஸில் ராஜபக்ஷ ஆகிய இருவரில் யாருக்கு வேட்பாளர் நியமனத்தை மஹிந்தர் வழங்குவார் என்பது தான் கேள்வி.

கோட்டாவைப் பொறுத்தவரை தமது சிக்கலை அமெரிக்கா தீர்க்கும் என மஹிந்தர் நம்புகின்றார். – கோட்டாவின் அமெரிக்கப் பிராஜவுரிமையை ரத்துச் செய்ய மறுப்பதன் மூலம்.

அப்படியானால் வேறுவழியின்றி பஸில் ராஜபக்ஷவுக்கு அந்த வேட்பாளர் நியமனத்தை வழங்குவாரா மஹிந்தர் என்று கேள்வி எழுகின்றது.

உள்வீட்டு/உள்குடும்ப வட்டாரங்கள் அப்படி நடக்காது என்ற செய்தியைக் கசிய விட்டிருக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக முடியாது என்றுதான் பலரும் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். அது தவறு. அவர் மீளவும் ஜனாதிபதியாக முடியும். அதற்கு சட்டத்தில் தாராளமாக இடமுண்டு.

ஜனாதிபதி பதவியில் இருக்கும் ஒருவர் இராஜினாமாச் செய்தால் அல்லது இறந்தால் உடனடியாக நாட்டின் பிரதமர் பதில் ஜனாதிபதியாவார். ஆனால் நாடாளுமன்றம் அடுத்த முப்பது நாள்களுக்குள் கூடி புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யும். அப்படி நாடாளுமன்றம் மூலம் தெரிவாகும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மஹிந்தர் எத்தனை தடவைகளும் வரலாம். அதற்குச் சட்டக் கட்டுப்பாடு ஏதும் இல்லை. அவர் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கத்தான் சட்டரீதியாகத் தடை உள்ளதே தவிர, அவர் ஜனாதிபதியாகுவதற்கு அல்ல.

அவ்வாறு அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு மீள வருவதற்கு இரண்டு விடயங்கள் அவருக்குத் தேவைப்படுகின்றன.

ஒன்று– தனது கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் இறக்கி, வெல்ல வைப்பதோடு தாம் விரும்பும் நேரத்தில் அப்பதவியை விட்டு இறங்கி, தமக்கு இடமளிப்பவராக அவர் இருக்கவேண்டும்.

அடுத்தது– அந்த நேரத்தில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படக் கூடியவராக மஹிந்தர் இருக்க வேண்டும்.

ஆக, நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆளை வெல்ல வைத்து அதன் பின்னர் நாடாளுமன்றைக் கலைக்க வைத்து (2020 ஏப்ரலுக்குப் பின்னர்தான் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு வரும்), பொதுத் தேர்தல் மூலம் தனது செல்வாக்கை நாடாளுமன்றத்தில் அவர் உறுதிப்படுத்தி, தன்னைப் பிரதமராக்கிக்கொள்ள வேண்டும்.

இவ்வளவும் நடக்குமானால் தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மீள அரியணைக்கு வந்து விடுவார் எனக் கருதுகிறார் மஹிந்தர்.

அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு – தனது விருப்பப்படி ஜனாதிபதித் பதவியை தான் விரும்பும் நேரத்தில் இராஜினாமாச் செய்து இடமளிப்பதற்கு – கோட்டாவும், பஸிலும் பொருத்தமற்றவர்கள், நம்ப முடியாதவர்கள் என்று கருதும் மஹிந்தர், தமது குடும்பத்துக்கு வெளியே தனக்குப் 'போடுதடி' போன்று தனது கட்டுப்பாட்டில் கிடக்கும் ஒருவரைத் தேடுகிறார் என்று ஒரு தகவல். அது பேராசிரியர் பீரிஸாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் குடும்பத்துக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதை அடுத்து, கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காக மஹிந்தர் ஓர் ஏற்பாடு செய்தார். தனது சகோதரியை அழைத்துத் தாங்கள் சகோதரர் நால்வரும் மட்டும் சந்திக்கும் விருந்துச் சந்திப்பு ஒன்றைத் தனித்து ஒழுங்குபடுத்தும்படி கூறினார்.

சில தினங்களுக்கு முன்னர் சகோதரியின் இல்லத்தில் இந்த விருந்து நடந்தது. நான்கு பேரும் பல மணி நேரம் மனம் விட்டுப் பேசினாராம். சில, பல முடிவுகள் எடுக்கப்பட்டன என்றும், அவை பரம இரகசியம் என்றும் உள் வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

எதுவென்றாலும் மலிந்தால் சந்தை வராமலா போகும்?

-மின்னல்-

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் பரபரப்பபான நிலையும் ஏற்பட்டிருந்தது.

மாணவரின் இப்போராட்டத்திற்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் முழுமையான ஆதரவை வழங்கி போராட்டத்திலும் பங்குகொண்டது. யாழ்.பல்கலைக்கழக வாளாகத்திற்குள் இருந்து பேரணியாக வந்த மாணவர்கள், பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலை மறித்து நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள இராமநாதன் வீதிக்கு நகர்ந்த மாணவர்கள் வீதியோராமாக நின்று போராட்த்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இராமநாதன் வீதியை மறித்த மாணவர்கள் அங்கிருந்து பலாலி வீதி, பரமேஸ்வர சாந்திப் பகுதிக்குப் பேரணியாக நகர்ந்து சென்றனர். பலாலி வீதியின் இரு மருங்கிலும் நின்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், திடீரெ பலாலி வீதியை மறித்து பரமேஸ்வர சந்தியில் ஒன்று கூடி நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பலாலி வீதி மற்றும் இராமநாதன் வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் வந்து வாகன நெரிசலை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்த போதும், மாணவர்களுடைய போராட்டம் காரணமாக வாகன நெரிசலை கட்டுப்படுத்த முடியாது போனது.

வீதியை மறித்து சுமார் அரை மணித்தியாலம் வரை போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அதன் பின்னர் அமைதியான முறையில் பல்கலைக்கழக வளாகத்திற்கு திரும்பினர்.

இப் போராட்டத்தின் போது, 'காவல்துறையா கஞ்சாதுறையா?', 'இலஞ்சம் வாங்குவதில் இருக்கும் ஆர்வம் குற்றங்களை தடுப்பதில் இல்லை', 'வாங்கும் ஊதியத்திற்கு காவல்துறை கடமையை செய்ய மறுப்பதேன்?', 'காவல் துறையே நித்திரையா?', 'காவல் துறையும் கயவர்களுடனா?', 'வளரும் பயிரை முளையில் கிள்ளாதே' என்று ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதப்பட்ட பதாகைகளைத்தாங்கியவாறும் பொலிஸாருக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும் மாணவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜொலிஸ்ரார்ஸ் கின்னணப் போட்டி

யாழ்ப்பாணம், ஜுன் 29

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இந்த வருடத்துக்கான போட்டியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்ப முடிவுதினம் நாளை சனிக்கிழமை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி ஒழுங்குத் தெரிவு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 25 கழகங்களும் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

சுற்றுப் போட்டி ஆட்டங்கள் ஜுலை 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் ஆட்டங்கள் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு 0771829243 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

# முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் துப்பாக்கி பாதாள உலகக் குழுவிடம் எப்படி வந்தது?

## ஷேஹான் சேமசிங்க எம்.பி கேள்வி எழுப்புகிறார்

மாத்தறையில் நகைக்கடை ஒன்றை கொள்ளையிட வந்த நபர்களிடம் முக்கிய பிரமுகர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் துப்பாக்கி இருந்தமை சம்பந்தமாக தகவல் வெளியானதும் அது குறித்து நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மாத்திரமே குழப்பமடைந்திருக்கிறார் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷேஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் கொழும்பு பொரளையில் உள்ள என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தத் துப்பாக்கி எந்த முக்கிய பிரமுகருக்கு சொந்தமானது என்பது குறித்தும் அமைச்சர் மங்கள சமரவீரவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அரசாங்கம் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

மாத்தறை சம்பவத்திற்கு முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது என்ற விடயத்தை மறைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்தச் சம்பவத்தில் பாதாள உலகக்குழு தலைவர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் அமைச்சர் மங்களசமரவீர பொலிஸாரை விமர்சித்திருந்தார் எனவும் ஷேஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்த வருடம் ஜுன் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து கடந்த 26 ஆம் திகதி நாட்டுக்குள் 15 கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன.

இவ்விதமாக பரவி வரும் பாதாள உலகக் குற்றச் செயல்களை அடக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளை சிறையில் அடைத்து, அந்த அதிகாரிகளின் மனத் தைரியத்தைச்சிதைத்துள்ளதன் காரணமாகவே பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனவும் ஹேஷான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## வாள்வெட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குண்டுத் தாக்குதல் மற்றும் வாள்வெட்டு தாக்குதலில் ஈடுபட்டுத் தப்பித்துள்ளது.

வாள்வெட்டுக் கும்பலால் அந்த வீட்டின் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் சம்பவம் இது என சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இங்கு 10 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வந்தது. வீட்டுக்குள் புகுந்த கும்பல், பெற்றோல் குண்டு தாக்குதலை மேற்கொண்டது. அதனால் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தது.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களை அக்குழு அடித்து நொருக்கியது. கதவைக் கொத்திச் சேதப்படுத்தியது. வீட்டின் குடும்பத்தலைவருக்கு வாளால் வெட்டியது. அவரது வயிற்றுப் பகுதியில் வெட்டு விழுந்தது.

வீட்டின் தளபாடங்களை நொருக்கிய கும்பல் நீண்ட நேர அட்டூழியத்தை அரங்கேற்றிய பின்னர் அங்கிருந்து வாள் களுடன் பகல்வேளையில் அச்சமின்றி வீதியால் தப்பிச் சென்றது. – எனத் தெரிவித்தார்.

அந்த குடும்பத்தலைவரின் மகன் தனு ரொக் என அழைக்கப்படுபவர் ஆவா குழுவைச் சேர்ந்தவர்களைக் காட்டிக்கொடுத்தார் என்பதற்குப் பழிதீர்க்கும் வகையிலேயே இவ்வாறு அந்தக் குடும்பத்தை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து மானிப்பாயில் மற்றொரு வீட்டுக்குள் புகுந்து இளைஞன் ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தி விட்டு அந்தக் கும்பல் தப்பித்தது.

டயஸ் (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு கையில் வெட்டுக் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞனை வெட்டும்போது அவரது அக்கா குறுக்கே சென்றதால் அவரது கையிலும் வெட்டு விழுந்தது.

டிவிசா (வயது 21) என்பவரும் கையில் படுகாயமைடந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயத்திற்குள்ளான இளைஞனின் கை பிளந்துள்ளது. அதனைச் சீர் செய்ய பிளாஸ்ரிக் சத்திரச்சிகிச்சை செய்ய வேண்டும் என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இளைஞனின் நெஞ்சு, முதுகு பகுதிகளிலும் வெட்டுக்காயங்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சிறுத்தை படுகொலையும் தெற்கின் பிரதிபலிப்பும்

**மக்கள் வசிக்கும் கிராமம் ஒன்றுக்குள் புகுந்து பத்துக்கு மேற்பட்டோரைத் தாக்கிப் பீதியை ஏற்படுத்திய சிறுத்தையை – வனவிலங்கு அதிகாரிகள் அதனை எதிர்கொண்டும் கூட, அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் தவறிய நிலையில் – அது, அக்கிராம இளைஞர்களால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கின்றது.**

**இந்த விடயம் சமூக ஊடகங்கள் ஊடாகக் காணொலி வடிவத்தில் பரவி பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.**

**நமது வாழிடத்துக்குள் புகும் நச்சுப் பாம்புகளையும் – பல சமயங்களில் பெரும் ஆபத்து ஏற்படுத்தாத நல்ல பாம்புகளையும் கூட – மற்றும் தேள், பூரான், புலிமுகச்சிலந்தி போன்ற விஷ ஜந்துக்களையும் அடித்துக் கொல்லும் பழக்கம் – வழமை – உண்டு.**

**இந்தச் சிறுத்தையை அடித்துக் கொன்றவர்களுக்கு அதை அப்படிக் கொல்வது சட்டத்தில் தடைசெய்யப்பட்ட விடயம் என்ற சட்ட நிலைமை புரிந்திருக்குமோ என்னவோ?**

**விலங்கினங்கள், தவார வர்க்கங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இப்படி சிறுத்தை ஒன்றைச் கொல்வது – பிடியாணை இன்றிக் கைது செய்வதற்கும், பிணை வழங்கப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்படுவதற்கும் – உரிய குற்றம் என சட்டத்தரணியும் சூழல் பாதுகாப்பு ஆர்வலருமான ஜெகத் குணவர்த்தனா கூறுகின்றார்.**

**சிறுத்தையைக் கொன்ற பின்னர் அதன் உடலத்தை வைத்துக் கொண்டு அந்த இளைஞர்கள் செய்த கூத்து அவமானகரமானது. நாகரிமற்றது. ஆனால் அந்தக் கொலையை வைத்து ஒட்டுமொத்தத் தமிழினத்தவரையும் அநாகரிகமானவர்களாக எடைபோட முயல்கின்றது தென்னிலங்கை என்பது தெற்கு ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியாகும் தகவல்கள், செய்திகளைப் பார்க்கும்போது தெளிவாகுகின்றது.**

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் எனத் தெரிவித்து ஓர் உடலத்தை இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு காட்டிய பின்னர், அதை வைத்துக் கொண்டு இந்த இலங்கைத் தீவின் 'தேசிய வீரர்கள்' என்று கூறப்பட்ட படையினர் நடத்திய கூத்துடன் ஒப்பிடுகையில், இந்த சிறுத்தையின் உடலத்தை வைத்துக்கொண்டு அந்த இளைஞர்கள் நடந்து கொண்ட விதம் அப்படி ஒன்றும் மோசமானதல்ல.**

**சிறுத்தை கொல்லப்பட்ட விதமும், முறைமையும் வேதனை தருகின்றனதான். அது சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க விடயமும் அல்லதான்.**

**ஆனால், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் கொத்துக் கொத்தாக – கூட்டம் கூட்டமாக – நம் தமிழ்ச் சகோதரர்கள் வகை தொகையின்றி கொன்றொழிக்கப்பட்ட போதும், மிக மோசமாக வேட்டையாடப்பட்டபோதும், அது குறித்து கவலைப்படவோ, வேதனை தெரிவிக்கவோ, குறைந்த பட்சம் மன்னிப்புத் தெரிவிக்கவோ முன்வராத தென்னிலங்கை –**

**அப்படி பல்லாயிரம் அப்பாவிகளைக் கொன்றொழித்து, மேலும் பல பத்தாயிரம் பேரின் அவயவங்களைப் பறிக்கும் அளவுக்குப் படுகாயங்களை ஏற்படுத்தி, பல லட்சம் பேரை வீடு, வாகனங்கள், சொத்துக்கள் இழக்கச் செய்து, ஏதிலிகளாக்கிய கொடூரத்துக்குக் காலம் பிந்தியாவது நீதி செய்யக் கூடாது என்று மறுத்து நிற்கும் தென்னிலங்கை–**

**அதற்கும் அப்பால் இந்தக் கொடூரங்களை இழைத்தவர்களை தேசிய வீரர்களாகப் போற்றி சட்டத்தின் முன் அவர்களை நிறுத்தக் கூட்டாக மறுத்து வரும் தென்னிலங்கை –**

**சிறுத்தை கொன்றொழிக்கப்பட்ட சம்பவத்தை பூதாகரமாக்கி, வடக்கில் உள்ள தமிழர்களை வன்முறை மிகுந்த சமுதாயமாகக் காண்பிக்கும் வகையில் பிரதிபலிப்புக்களைக் காட்டுவது சுத்த அநாகரிகமன்றி வேறில்லை.**

**அண்மையில் கூட தென்னிலங்கையில் கரடி ஒன்றை வனவிலங்கு அதிகாரி ஒருவர் தற்பாதுகாப்புக்காகச் சுட்டுக் கொன்ற சம்பவம் ஒன்று நடந்தேறியிருக்கின்றது.**

**கிராமத்துக்குள் புகுந்த சிறுத்தை, கிராமத்தவரின் கண்ணுக்கு முன்னால் பத்து மேற்பட்டோரைக் தாக்கிக் காயப்படுத்தி, பெரும் பதற்றத்தை ஏற்படுத்திய பின்னணியில் –**

**நீண்ட நேரமாகியும் வனவிலங்கு அதிகாரிகளினால் அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், வனவிலங்கு அதிகாரி ஒருவரையே அச்சிறுத்தை தாக்கிப் படுகாயப்படுத்தி, ஏற்படுத்திய பீதியில் –**

**வனவிலங்கு அதிகாரிகளினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத சிறுத்தை, காட்டுக்குள் தப்பிச் சென்றால், தொடர்ந்தும் பயத்திலும், பீதியிலும், பேரச்சத்திலும் உயிரைப் பிடித்துக் கொண்டுதான் தமது கிராமத்தில் வாழ வேண்டி நேரும் என்ற மனப் பதற்றத்தில் –**

**இவை எல்லாவற்றையும் தாண்டி, கூட்டுக் கூட்ட மனவுணர்வில் (Mob mentality) –**

**புரியப்பட்ட கொடூரமே இந்த சிறுத்தைக் கொலை. இந்த விடயங்கள் எல்லாவற்றையும் நீதிமன்றம் தனது விசாரணையின்போது நிச்சயம் கவனத்தில் கொள்ளும்.**

# இலங்கையின் மூத்த குடி தமிழர்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி – இலங்கையின் மூத்தகுடிகள் தமிழரே என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டு வருகின்றீர்களே! சிங்களப் பேராசிரியர்கள் இதுவரை கூறி வந்ததை முற்றாக மாற்றும் வண்ணம் உங்கள் கருத்து அமைந்துள்ளது. உங்கள் கூற்று சிங்கள மக்களை சீற்றமடையச் செய்யும் அல்லவா?

**பதில்** – உண்மையை சில தருணங்களில் கூறாது விடுவது பொருத்தமானதாகும். சில தருணங்களில்அதனை இடித்துக் கூற வேண்டியுள்ளது.

ஒருவர் சிலரால் வாள் தடிகளுடன் துரத்தப்பட்டு வருகின்றார். அவர் உங்கள் வீட்டினுள் நுழைந்து ஒளிந்து கொள்கின்றார். வந்தவர்கள் அவரின் அடையாளங்களைக் கூறி 'வந்தாரா?' என்று கேட்கின்றார்கள். 'ஆம்' என்று அவரைப் பிடித்துக் கொடுத்தால் ஒளிந்தவரின் உயிர் உங்கள் முன்னிலையிலேயே பிரிய சந்தர்ப்பம் உண்டு. நீங்கள் முடியுமெனில் மௌனம் காக்கலாம் அல்லது 'இல்லை' என்று கூறலாம். 'பொய்மையும் வாய்மை இடத்தே புரைதீர்ந்த-நன்மை பயக்கும் எனின்' என்று பொய்யாமொழியினராகிய வள்ளுவரே கூறியிருக்கின்றார்.

### தமிழர்கள் வந்தேறு குடிகளா?

அதாவது பொய்யான சொற்கள் குற்றமற்ற நன்மையைப் பிறக்கு நல்குமாயின் அச்சொற்கள் வாய்மைச்சொற்கள் போன்ற நிலையை அடைவன என்றார். அவ்வாறான சொற்க ளானது பிறக்கு நன்மை பயக்க வேண்டும். தனக்கு நன்மை தருவதாக இருந்தால் அது சுயநலம் ஆகி விடும். ஆகவேதான் 'புரை தீர்ந்த' என்றார் வள்ளுவர். குற்றம் அற்ற என்பது பொருள்.

ஆனால் உண்மையானது சில தருணங்களில் வெளிக் கொண்டு வரப்படாது நம்மால் மௌனம் காக்கப்பட்டால் பொய்மைகள் நாடுபூராகவும் உலாவத் தொடங்கி விடுவன. இன்று அவ்வாறான ஒரு நிலையே எழுந்துள்ளது. பத்தாம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்பின்போது வந்தவர்களே இலங்கைத் தமிழர்கள்என்றுகூறிவருகின்றார்கள் பெரும்பான்மையினர். உண்மை அதுவல்ல. இலங்கை யின் மூத்த குடிகள் நாகர்கள் என்று அழைக்கப்பட்ட தமிழர்களே என்பது இப்பொது வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. என்றாலும் சுயநலம் கருதி, சிங்கள அறிஞர்கள் உண் மையைத் தெரிந்தும் அதைத் திரிபுபடுத்தி சொல்லி வருகின்றார்கள். அவர்களின் பொய்மைகள் வாய்மைக்குள் அடங்கமாட்டா.

உங்களைப் போலவே ஒரு சிங்கள அன்பர் ஆத்திரத்துடன் எனக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பினார். உண்மைக்குப் புறம்பான தகவல்களை நான் பரப்பி வருகின்றேன் என்றார். அதற்கு உடனே நான் பதில் இறுத்தேன். எனது வரலாற்று அறிவின்படி தமிழரின் வரலாறு பற்றிய சில விடயங்களைச் சரியென்று ஏற்றுக்கொண்டுள்ளேன். அவற்றைப் பிழையென்று கூறக்கூடிய மேம்பட்ட அறிவு உங்களுக்கிருந்தால் உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

### ஐந்து விடயங்கள்

நான் நூல்களை வாசித்தறிந்து, எமது வரலாற்றுப் பேராசிரியர்களுடன் கலந்து ஆலோசித்து எனது தரவுகள் சரியா, நீங்கள் கூறுபவை சரியா என்ற முடிவுக்கு வருகின்றேன் என்று கூறி பின்வரும் ஐந்து விடயங்களை மின்னஞ்சல் மூலம் அவர் முன்வைத்தேன்.

1. இலங்கையில் திராவிடர்கள் புத்த பெருமானின் பிறப்புக்கு முன்னரே இருந்து வாழ்ந்து வந்துள்ளார்கள்.

2. ஒரு முழுமையான மொழி என்ற முறையில் சிங்கள மொழி பரிணாமம் பெற்றது கி.பி 6ம் அல்லது 7 ஆம் நூற்றாண்டிலேயே. அதற்கு முன் சிங்கள மொழி என்று ஒன்று இருக்கவில்லை.

3. நவீன DNA சோதனைகள் தற்போதைய சிங்கள மக்கள் பண்டைய திராவிடரின் வாரிசுகளே என்பதை உறுதிப்படுத்துகின்றன. திராவிடர் என்ற சொல்லும் தமிழர் என்ற சொல்லும் தமிழரையே குறிப்பிடுகின்றன. சமஸ்கி ருதம் பேசிய மக்களுக்கு தமிழர் என்று உச்சரிக்க முடியாததால் அவர்களே தமிழர்களைத் திராவிடர் என்று அழைத்தார்கள்.

4. சிங்கள மொழியானது தமிழ், பாளி மற்றும் அக் காலத்தைய பேச்சு மொழிகளில் இருந்தே உருப்பெற்றது.

5. சிங்களவர் என்ற முறையில் வட மாகாணம் பூராகவும் எந்தக் காலகட்ட திலும் சிங்கள மக்கள் இங்கு வாழவில்லை. தமிழ் மக்கள் வாழ்ந்த பண் டைய இலங்கையில் பின்னர் ஒரு கட்டத்திலேயே சிங்கள மக்கள் உருவெடுத்தார்கள். அவர்கள் தற்போதைய வட மாகாணத்தின் தெற்குப் பக்கமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர் எனது கூற்றை மறுத்து தனது தரவுகளை சமர்ப்பிப்பதாகக் கூறியுள்ளார். எனது கூற்றுக்களே அவர்களைக் கோபமடையச் செய்து சிந்திக்கவும் வைத்துள்ளது. உண்மை நிலையை உணர்த்தினால் சிங்கள மக்கள் சீற்றமடைவார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சிங்கள மக்களுக்கு எதிரானவன் அல்லன். ஆனால் சிங்கள மக்கள் இதுவரையில் நிர்மாணித்துள்ள பொய்மையான வரலாற்றை எதிர்ப்பவன். உண்மை வெளிவர வேண்டும் என்ற விருப்பம் உடையவன்.

### உண்மையை உரைத்தார்

ஒரு திருமணம் நடக்கவிருந்தது. ஒரு வீட்டுக்குக் குடியிருக்க வந்த ஒரு குடும் பத்தவர் தாங்கள் அந்த வீட்டுச் சொந்தக்காரரின் உறவினர் என்று கூறி தமது வாரிசுக்கு திருமணமும் நிச்சயித்து விட்டார்கள். ஆனால் இரு குடும்பங்களுக்குமிடையில் எதுவித சொந்தமுமில்லை. குலம், கோத்திரம், பின்னணி எல்லாம் வெவ்வேறு. வீட்டுச் சொந்தக்காரருக்கு இது தெரிய வந்தது. ஆயிரம் பொய்சொல்லி என்றாலும் பெண்பிள்ளை ஒருவளைக் கரைசேர்க்க வேண்டும் என்று எம் மக்கள் பேசி வந்துள்ளதை அவரும் அறிந்திருந்தார்.

அவர் மௌனம் காத்திருக்கலாம். ஆனால் பொய் சொல்லிக் கல்யாணம் நடக்கின்றதே, அது எதிர்காலத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் யோசித்துப் பார்த்தார். தனது கடமை, உண்மையை உள்ளவாறு கூறிவைப்பதே என்பதை உணர்ந்தார். மாப்பிள்ளை வீட்டார்கள் சொந்தம் பற்றி வேறு நபர்கள் மூலம் வினாவிய போது உண்மையைக் கூறினார். எந்தவித சொந்த முமில்லை; அவர்கள் குடியிருக்க வந்தவர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். இதனால் நிச்சயதார்த்தத்துடன் திருமணம் தடைப்பட்டது. இந்த நிலையை ஏற்படுத்தியமை பிழையென்று கூறுவோரும் உண்டு. சரியென்று அடித்துக் கூறுவோரும் உண்டு.

எது, எவ்வாறிருப்பினும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை ஊரில் உலாவவிட்டது குடியிருப்பாளரின் தவறு. தான் தவறைச் செய்துவிட்டு, பொய்யைப் புனைந்துரைத்து விட்டு, உண்மையை வெளிக்கொண்டு வந்த வரின் மீது சீற்றமடைவது குடியி ருப்பாளரின் பிழை. அதை உண ராமல் பேசுவது பொய்மையை உண்மையாக்குவது போலாகும். திருமணமானபின் உண்மை வெளிவந்தால் தம்பதியினரிடையேயும் குடும்பத்தினரி டையே யும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை நாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பொய்மையை உண்மை என்று சித்திரித்து ஒருசாரார் நன்மைகளைப் பெற்றுவரப் பார்ப் பதும் கருத்துக்கெடுக்கப்பட வேண் டும். இவ்வாறான நிலையில் தான் பொய்மைகளை விமர்சித்து வருகின்றேன்.

பொய்மைகளின் வழிநின்று சீற்றமடைபவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது பிழையன்று. அவ்வாறு செய்யாவிட்டால் பொய்மையை எப்போது வேண்டுமானாலும் பலாத்காரமாக நிலைநிறுத்தலாம் என்றாகி விடும். உண்மைக்கு ஒரு பலம் உண்டு. அதுபற்றி ஆதிசங்கரரின் குருவின் குருவான கௌபாதர் என்பவர் கூறியுள்ளார். உண்மையானது ஆயிரம் பொய்மைகளுக்கு மத்தியிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கூடியது என்றார். அதன் சக்தி அது. எனவே உண்மையைக் கூறினால் மற்றவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்று எக் காலத்திலும் மௌனம் சாதிக்க வேண்டும் என்று எண்ணுவது மடமை.

### பத்மநாதனின் ஆய்வு வெளியீடு

பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளி வந்த தமது அண்மைய நூலான 'இலங் கைத் தமிழர்வரலாறு – கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்– கி.மு 250 – கி.பி 300' என்ற நூலின் தமது பதிப்புரையில் (பக்கம் XIV) பின்வருமாறு கூறுகிறார் "இலங்கையின் மூன்றிலொரு பாகத்திலே தமிழர் சமுதாயம் கி.மு முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகி விட்டது என்பதையும் தொடர்ச்சியான ஒரு நிலப்பகுதியிலே தமிழ் மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கி விட்டனர் என்றும் சொல்லக்கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதாலும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டைப் பிரதானமாக அவர்களே இலங்கையிற் பரப்பினார்கள் என்பதாலும் கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலைபெற்றுள்ளமை உய்த்துணரப்படுகின்றது. தமிழ் மொழியின் தொன்மை பற்றி தமிழ்நாட்டுத் தொல்பொருள் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்க முடி யாதவற்றை இலங்கையிற் கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலேயே சொல்ல முடிகின்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்".

ஆகவே இலங்கையின் மூத்த குடிகள் தமிழரே என்று சொல்வதில் தவறு ஏதும் இருப்பதாகக் கூற முடியாது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

**30.06.2018**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : உத்தராடம் பி.ப. 6.11 வரை
திதி : துதியை பி.ப. 2.36 வரை
சுபநேரம் : 2.56 – 4.26 வரை
இராகுகாலம் : 8.56 – 10.26 வரை

# தனக்கும் கோட்டாவுக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்கிறார் பஸில்



எனக்கும் எனது சகோதரர் கோட்டபாய ராஜபக்வுக்குமிடையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. நாங்கள் இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனக்கும் எனது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் நெருக்கடி நிலவி வருகிறது என பிரசாரம் செய்துவருகின்றனர். ஆனால் எனக்கும் எனது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

நாங்கள் இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். எப்படியிருப்பினும் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது யார் ஜனாதிபதி வேட்பாளர் என்பதை மஹிந்த ராஜபக்ஷ தீர்மானிப்பார். மஹிந்த ராஜபக்ஷவையே மக்கள் விரும்புகின்றனர்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ யாரை களமிறக்குகின்றாரோ அவர் வேட்பாளராக வருவார். அவரின் வெற்றிக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மாறாக எனக்கும் சகோதரர் கோட்டாபயவுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். எமக்கிடையில் பிரச்சினையிருப்பதாக பொய் பிரசாரம் செய்கின்றனர். நாங்கள் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடனும் செயற்பட்டு வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸாருக்கு பயந்து ஓடியதால் விபத்துக்குள்ளான குடும்பஸ்தர்!



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜிம்ரோன் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவரை போக்குவரத்து பொலிஸார் துரத்திச் சென்றபோது அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ஜிம்ரோன் நகர் கிராமத்துக்கான உள்ளக வீதியில் இந்த குடும்பஸ்தர் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது போக்குவரத்து பொலிஸார் குடும்பஸ்தரை நிறுத்துமாறு வழிமறித்துள்ளனர்.

எனினும், போக்குவரத்து பொலிஸாரது ஆணையை மீறி இந்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது வேகமாக பயணித்துள்ளார். இந்த நிலையில், பொலிஸார் அவரைபின்தொடர்ந்து துரத்திச்செல்லும்போது அவர் வீதியோரத்தல் காணப்பட்ட மின்கம்பத்துடன் மோதிவிபத்துக்குள்ளாகியுள்ளார்.

இவ்வாறு விபத்துக்குள்ளானவர் இரு பிள்ளைகளின் தந்தையான இராசமாணிக்கம் இராஜேந்திரன் (வயது 54) என்பவராவார்.

மேலும் இவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீர்கொழும்பில் போலி வைத்தியர் குற்றப்புலனாய்வு பிரிவால் கைது

போலியான முறையில் தன்னை வைத்தியராக அறிமுகப்படுத்தி சுமார் 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நிதி மோசடி செய்த நபர் ஒருவர் நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்களைத் திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி இவர் மோசடி செய்துள்ளர் என சந்தேகநபருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


பமுனுகம, கந்தானை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பிரசேங்களில் சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் அது மட்டுமன்றி, கெசினோ சூதாட்டத்திலும் ஈடுபடுபவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பமுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடம் இருந்து வைத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பல வகை போதைப் பொருள்களுடன் விமான நிலையத்தில் ஒருவர் சிக்கினார்



70 லட்சம் ரூபா பெறுமதியான பல வகையான போதைப் பொருள்களுடன் நபர் ஒருவரை விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 320 கிராம் ஹெரோயின், 52 கிராம் ஐஸ், 230 கிராம் ஹஷிஷ் ஆகிய போதைப்பொருள்களை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் கைப் பற்றியுள்ளனர்.

இந்த நிலையில் கைது செய்தவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# இலங்கை தொழில்நுட்ப நிபுணர்கள் திருத்தியமைத்த ரயிலை அடுத்த மாதம் சேவையில் ஈடுபடுத்த திட்டம்



இலங்கையின் தொழில்நுட்ப நிபுணர்கள் நவீனமயப்படுத்திய ரயில் எதிர்வரும் 2ஆம் திகதி தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றது என ரயில்வே பொதுமுகாமையாளர் கலாநிதி விஜய சமரசிங்ஹ தெரிவித்தார்.

சுமார் 15 வருடங்கள் பழமை வாய்ந்த ரயில் பெட்டிகளை நவீனமயப்படுத்தி புதிய ரயிலாக இது உருவாக்கப்பட்டுள்ளது. இது உள்நாட்டு நிபுணர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# திருகோணமலையை சுற்றுலா மற்றும் வர்த்தக நகரமாக அபிவிருத்தி!




கொழும்பு, ஜூன் 29

திருகோணமலையை சுற்றுலா மற்றும் வர்த்தக நகரமாக அபிவிருத்தி செய்வதற்குப் புதிய வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைநகர சபை உள்ளிட்ட பிரதேச சபைகள் இதற்காக ஒன்றிணைந்திருக்கின்றன என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

முழு வசதிகளைக் கொண்ட சர்வதேச மாநாட்டுமண்டபம், விளையாட்டு மைதானம், சுற்றுலா விற்பனை வலயம் உள்ளிட்டவை இதில் இடம்பெறவுள்ளன.

சிங்கப்பூர் நிறுவனமொன்று இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. புதிய நகர வீடமைப்புத் தொகுதியொன்றும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலர் பொ. தயானந்தன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

கலை, கலாசார போட்டிகள் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-19)

## யாழ். மாநகர சபையின் வளாகத்தில்

# தீயணைப்பு சேவை கட்டடம்; இன்று காலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். மாநகர சபையின் தீயணைப்புச் சேவைக்கான புதிய கட்டட திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும்.

நல்லூர், பருத்தித்துறை வீதி யாழ். மாநகர சபை வளாகத்தில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு யாழ். மாநகர சபை முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற தீயணைப்பாளர்கள் கௌரவிப்பும், தீயணைப்புச் சேவையின் விவரணப்படம், தீ அனர்த்தம் சம்பந்தமான செய்முறை நிகழ்வு போன்றவையும் இடம்பெறும்.

யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களும் சபையின் உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளும் நிகழ்வுக்கு அனைவரையும் அழைக்கின்றார் ஆணையாளர். (இ -19)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 29

உயர்அழுத்தமற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில்-**

சாவகச்சேரி டச்சு வீதி, பெருங் குளம் சந்தி, மடத்தடி ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

சின்னடம்பன், அம்பகாமம், ஒலுமடு, தாச்சியடம் பன் ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்-**

மலையாபருத்திக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மூளாய் அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை, மூளாய் அருள்மிகு ஆதிபராசக்தி அலங்காரநாயகி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன ஏக குண்ட பக்ஷ கும்பாபிஷேகம் நாளை மறுதினம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.11 மணி முதல் 10.05 மணி வரையான சுபவேளையில் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

கும்பாபிஷேகத்துக்கான பிரதம குரு ஆதீனகர்த்தாவும் தேவஸ்தான பிரதம குருவுமான சிவஸ்ரீ தெ.புவனேந்திர நாதக் குருக்கள். ஆலய திருப்பணிக்கான அறக் கொடையாளர் கனடா மார்க் நகர நடராசா உமாகாந்த்.

(இ)

# உலக சமாதான சுட்டெண் பட்டியலில் இலங்கை 67 ஆவதாக முன்னேற்றம்

இந்த ஆண்டுக்குரிய உலக சமாதான சுட்டெண் பட்டியலில் இலங்கை 67 ஆவது இடத்தை நோக்கி முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டிற்குரிய பட்டியலில் இருந்ததை விடவும் ஐந்து ஸ்தானங்களால் இலங்கை முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளாதாரத்திற்கும், சமாதானத்திற்குமான நிறுவனம் என்ற அமைப்பு உலகில் உள்ள 163 நாடுகள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து சமாதான சுட்டெண் பட்டியலை வெளியிடுவது வழக்கம்.

இம்முறை தெற்காசிய பிராந்திய நாடுகள் மத்தியில் இலங்கை இரண்டாவது இடத்தை பிடித்திருப்பது சிறப்பம்சமாகும்.

சமாதானப் பட்டியலின் அடிப்படையில் பிராந்தியத்தில் பூட்டான் முதலிடத்தில் உள்ளது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகள் இலங்கையை விட கீழான நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஞாயிறன்று 'அற்றைத் திங்கள்'

யாழ்ப்பாணம்ஜூன்29

யாழ் .மாவட்ட கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் சாஹித்திய விருது பெற்ற 'அற்றைத் திங்கள்" கூத்துருவ நாடகம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் .மாவட்ட கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு பட்ட கலை நிகழ்வுகள் பிரதேச கலாசார அதிபார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம் கூத்துக் கலையையும் கூத்துக் கலைஞர்களையும் மகிழ்விக்கும் வகையில் 'அவற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகம் மேடையேற்றப்படுகின்றது. அனைத்து கலைஞர்களும் ஆதரவு வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

(இ-19)

# இலங்கை - அமெரிக்க பல்கலை புரிந்துணர்வு உடன்படிக்கை

விவசாயத்துறையில் தொழில் நுட்பபுரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை, அமெரிக்கா மேச்சன்ட் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடவுள்ளது.

இதன்மூலம் விவசாயத்துறையில் ஆய்வு மற்றும் கல்வி தொடர்பானதகவல்களை பரிமாறிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இதேபோன்று கொழும்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் விவசாய ஆய்விற்கான வசதிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தினசரி ராசி பலன் (29.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிரதமைத்திதி பகல் 12.47 மணி வரை பின்னர் துவிதீயை. நட்சத்திரம்: பூராடம் பகல் 3.21 மணி வரை பின்னர்உத்தராடம். மரணயோகம் பகல் 3.21மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 10.39 மணி முதல் 12.13 மணி வரை.
**சுபநேரம்** - காலை 5.58 மணி முதல் 7.28 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆனி மாத வளர்பிறை துவிதீயை.
**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். தேங்கிக் கிடந்த காரியம் கைகூடும். வியாபாரிகள் திறமையான தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல்படுவார்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**ரிஷபம்** குழப்பமான நாள். பொருளாதாரம் நலிவடையும். மனதில் சஞ்சல நிலை இருக்கும். புதிய கடன்படும் நிலை உண்டாகும். புதிய நண்பர்களின் பழக்கம் தர்மசங்கடமாக அமையும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராகஇருக்கும். குடும்பஉறவுகளால்சச்சரவுகள்உண்டாகும். உடல் நலனில் அக்கறை கொள்ள வேண்டி வரும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் பட நேரும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். நண்பர்களின் சேர்க்கையால் பல உதவிகள் கிட்டும். தேங்கிக் கிடந்த உறவுகளுடன் இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு கிடைக்கும். சகோதர உறவு பலப்படும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். நகைகள் அடைவு போக வாய்ப்புள்ளது. உடல் நலக் குறைவால் வைத்தியச் செலவுகள் உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகளால் தடுமாற்றம் உண்டாகும்.

**துலாம்** மத்திமமான நாள். பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். செலவுகள் அதிகமாகும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும். எவருடனும் அளவுடன் பழகுதல் நன்மை தரும்.

**விருச்சிகம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் மன நிறைவைத் தரும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். தொழிலாளர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும். சிலருக்கு தூர தேசப் பயணம் அனுகூலமாகும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். சிலருக்கு அரசாங்க பணிகள்அனுகூலமாகும்.

**மகரம்** சஞ்சலமான நாள். பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். வியாபாரத்தில் போட்டிகளால் வருமானம் குறையும். கடன் படும் நிலை ஏற்படும்.

**கும்பம்** உயர்வான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரிகள் ஆடம்பரப் பொருள் விற்பனையில் ஆதாயம் பெறுவார்கள். நல்லோர் நட்பு வெற்றியைத் தேடித் தரும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் பாசமும், நேசமும் கலந்திருக்கும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களின் திறமை பளிச்சிடும்.

**சந்திராஷ்டம நாள்; கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கடவுச்சீட்டு பற்றாக்குறையை 2 மாதங்களில் நீக்க நடவடிக்கை




கொழும்பு, ஜூன் 29

அனைத்து நாடுகளுக்குமாக பயன்படுத்தப்படும் கடவுச்சீட்டுகளுக்கு நிலைவிவரும் பற்றாக்குறை இரண்டு மாதங்களில் நீக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவை கூட்டத்தின்போது உள்நாட்டு அலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அமைச்சர் எஸ்.பி. நாவின்ன அனைத்து நாடுகளுக்கும் பயன்படுத்தப்படும் 10 லட்சம் கடவுச்சீட்டுகளை புதிதாக பெற்றுக்கொள்ளுவதற்கான கேள்வி மனு குறித்த பரிந்துரையை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இதற்கு அமைச்சரவை அதிகாரம் வழங்கியுள்ளது.இதற்கமைவாக வெளிநாடுகளுக்கு பயன்படுத்தப்படும் புதிய கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன என அவர் தெரிவித்தார்.

இந்த கடவுச்சீட்டுக்கள் கிடைக்கும் வரையில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு பயன்படுத்தப்படும் கடவுச்சீட்டுக்கள் அனைத்து நாடுகளுக்கானகடவுச்சீட்டுக்களாக பயன்படுத்தப்பட்டுவருகின்றன என்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

# உதயங்க நாடு திரும்புவார்; மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



இலங்கை அரசினால் தேடப்பட்டு வரும் நபரான ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தனது வேண்டுகோளின் பேரில் ஒரு மாத காலத்தில் நாடு திரும்புவார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் கிரிவிகாரையில் மத வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உதயங்க வீரதுங்கவிற்கு நாடு திரும்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். உதயங்க வீரதுங்கவுக்கு மிக் போர் விமான கொள்வனவில் ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக இன்டர்போல் சிவப்பு அட்டை பிறப்பிக்கப்பட்டபோதும் வீரதுங்கவை நாட்டிற்குக் கொண்டுவரவில்லை.

மேலும் தேர்தல் அச்சம் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசு பங்கம் விளைவிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்துக்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 29

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 1330 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 1439 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தலைமையக போக்குவரத்து பிரிவு பிரதிப் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டீ.ஏ. தனஞ்சய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வீதி விபத்துக்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விடே நிகழ்ச் சித் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சின் விடே வைத்தியர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

# விரைவில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கைப்பற்றுவோம் என்கிறார் விமல் வீரவன்ச

பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தை எம்வசப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதே எமது பிரதான இலக்காகும் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் விடுதலை முன்னணியால் கொண்டுவரப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கம் எமக்குள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிக்கவும் நாட்டைத் துண்டாடவும் மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முன்னெடுக்கும் நோக்கங்கள் எமக்கு



நன்றாகவே தெரிகின்றன. எனவே நாட்டைக் காப்பாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்துள்ளார். நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளார். ஆகவே இது போதுமானது. இன்று தேசியப் பாதுகாப்பு விடயத்தில் பெரும் அச்சுறுத்தல் உள்ளது.

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் சூழல் உள்ளது. வடக்கு முதல்வர் நாட்டைத் துண்டாடும் நோக்கத்தில் செயற்பட்டு வருகிறார். சிவாஜிலிங்கம் போன்றவர்கள் பிரிவினைவாதக் கொள்கையில் செயற்பட்டு வருகின்றனர். பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்களை கேட்டுக்கொண்டு அவர்கள் வடக்கில் மீண்டும் தனி ராஜ்ஜியமாக செயற்பட முயற்சித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் நோக்கங்கள் மூலமாக விடுதலைப் புலிகளின் இலக்கு என்னவோ அது அரசாங்கத்தின் மூலமாகவே நிறைவேற்றப்படும். ஆகவே 20 ஆவது திருத்தச் சட்டத்தைத் தோற்கடிப்பது குறித்து சகல தரப்புகளுடனும் நாம் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி ஆசனத்தை நாம் கைப்பற்ற வேண்டும். அந்த நோக்கம் எமக்குள்ளது. குறிப்பாக இந்த அரசின் ஆட்சி முடிவுக்கு வரும் வரையில் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவைக் கொண்டுவரவேண்டும். அதற்கான சூழலை நாம் உருவாக்குவது குறித்தும் சிந்தித்து வருகின்றோம்.

இப்போது அரசில் இருந்து பலர் வெளியேறி எதிர்க்கட்சிக்கு மாறியுள்ளனர். ஆகவே, இப்போது கூட்டு எதிர்க்கட்சி பிரதான எதிர்க்கட்சியாக மாற்றம் பெற்றுள்ளது. எனவே மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக மாற்றும் நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொலன்னறுவையில் 58 ஆவது பொஸன் அன்னதான நிகழ்வு



பொலன்னறுவை, ஜூன் 29

பொலன்னறுவை பௌத்த சங்கத்தால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் 58ஆவது தடவையாக நடைபெறும் பொஸன் அன்னதான நிகழ்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைத்தார்.

அன்னதான நிகழ்வு நேற்று முன்தினமும், நேற்றும் பொலன்னறுவையில் இடம்பெற்றது.

மஹிந்ததேரர் இலங்கைக்கு வருகைதந்த பொஸன் பௌர்ணமி தினத்தில் வரலாற்று முக்கியத்துவமிக்க புண்ணியஸ்தலங்களுக்கு வருகை தரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு பொலன்னறுவை பௌத்த சங்கத்தின் தலைவர் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இந்த வருடாந்த அன்னதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

மகா சங்கத்தினருக்கான அன்னதானம் வழங்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதியின் தலைமையில் பொது மக்களுக்கான அன்னதான நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா அமரபுர நிகாயவின் உடரட அமரபுர பிரிவின் அனுநாயக்க தேரர் ஜப்பானின் தலைமை சங்க நாயக்க தேரர் சங்கைக்குரிய யாலகமுவே தம்மிஸ்ஸர நாயக்க தேரரினால் விசேட அனுசாசன உரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் எலகர, பகமூன பிரதான சங்கைக்குரிய லியங்கஸ்வகுரே தேவானந்த நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் பங்குபற்றினர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொலன்னறுவை புண்ணிய பூமிக்கு வருகை தந்திருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த அன்னதான நிகழ்வில் பங்கேற்றனர். அவர்களுக்கான அன்னதான வழங்கும் நடவடிக்கைகளில் ஜனாதிபதியும் பங்குபற்றினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக கொலொன்னே, சிறிபால கம்லத், வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்ன, பொலன்னறுவை நகர பிதாசானக்க சிதத் ரணசிங்க, பொலன்னறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கல்விகாரையில் புனித சின்னங்கள் பொதுமக்கள் தரிசிப்பதற்காக திறப்பு



பொலன்னறுவை, ஜூன் 29

பொலன்னறுவை பொஸன் தின நிகழ்வுகளுடன் இணைந்ததாக பொலன்னறுவை வரலாற்று முக்கியத்துவமிக்க கல்விகாரையில் இடம்பெறும் புனித சின்னங்களைப் பொதுமக்கள் தரிசிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கண்டி நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்திலிருந்து இந்த புனித சின்னங்கள் கொண்டு வரப்பட்டன.

மக்கள் தரிசிப்பதற்காக புனித சின்னங்கள் வைக்கப்பட்டுள்ள விசேட பேழையை பிரதிஷ்டை செய்த ஜனாதிபதி, முதலாவது மலர் பூஜையை செய்தார்.

சங்கைக்குரிய கந்தகெடியே அத்ததஸ்ஸி தேரரினால் விசேட சமய கிரியைகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க, பொலன்னறுவை நகர பிதா சானக்க சிதத் ரணசிங்க, பொலன்னறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.



'ஜனாதிபதி சதஹம் யாத்ரா' சமய உரைத்தொடரின் பொஸன் பௌர்ணமி தின உரை நேற்று வரலாற்று முக்கியத்துவமிக்க திம்புலாகலை ரஜமகா விகாரையில் இடம்பெற்றது.


பம்பலப்பிட்டிய ஸ்ரீவஜிராராம விகாராதிபதி சங்கைக்குரிய திருகுணாமலயே ஆனந்த நாயக்க தேரர் சமய உரையை நிகழ்த்தினார். ஜனாதிபதியும் அவ்வுரையை செவிமடுத்தார்.

## தபால் சேவைகள் அனைத்தும் நேற்று வழமை நிலைமைக்கு!

நீண்ட நாள்களாக தபால் ஊழியர்களினால் மேற்கொண்டு வந்த பணிபகிஷ்கரிப்பு கைவிடப்பட்ட நிலையில் தபால் சேவைகள் அனைத்தும் நேற்று வழமைக்குத் திரும்பின.

களுவாஞ்சிகுடி தபால் நிலையத்தின் நடவடிக்கைகள் யாவும் சீராக நடைபெற்றதை அவதானிக்க க்ஷடியதாக இருந்தது. இந்த தபாலகத்துக்கு கீழ்இயங்கும் ஓந்தாச்சிமடம், மகிழூர்முனை, மகிழூர், எருவில், குறுமண்வெளி, போரதீவு, வைக்கலேலை, ஆகிய ஏழு உபதபாலகத்திற்கான கடிதங்கள் பிரிக்கப்பட்டு உரியவாறு குறித்த உப தபாலங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மற்றும் தேங்கிக் கிடந்த கடிதங்களில் பதிவுத்தபால்களை பிரித்தெடுத்து பதியும் நடவடிக்கையும் தபாலகத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வழமை போன்று தபால் ஊழியர்கள் கடிதங்களை



விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையுடன் மக்களும் தங்களது சேவைகளை பெற்றுக்கொள்ளதக்கவாறு தபாலகம் வழமைபோன்று இயங்கியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஜொலிக்கும் கலசங்களுடன்

# கீரிமலை நகுலேஸ்வரரின் இராஜகோபுரம்

இலங்கைத் தீவில் சரித்திரப் புகழ் மிக்க பஞ்ச ஈஸ்வரங்களில், யாழ் குடாநாட்டின் வடமுனையில் அமைந்துள்ள நகுலேஸ்வரர் ஆலயம் எனும் நாமம் கொண்ட, கீரிமலை சிவன் கோவிலும் ஒன்றாகும்.

கீரி என்னும் சொல், சமஸ்கிருத மொழியில், 'நகுல' எனப் பொருள்படும். கீரிமுகம் கொண்ட நகுலமுகன் என்ற முனிவர் இத் தீர்த்தத்தில், ஸ்நானஞ் செய்து வழிபட்டமையால் கீரி முகம் மாறப் பெற்றார் என்றும், திசையுக்கிர சோழ மன்னன் மகளாகிய மாருதபுரவீக வல்லி என்னும் இளவரசி இவ்வருவியில் நீராடி குன்ம நோயும், குதிரை முகமும் நீங்கப் பெற்றாள் என்றும் நகுல புராணக் கதைகளில் இருந்து அறியமுடிகிறது.

போர்த்துக்கீசர் காலத்தில் 1894 இல் நிர்மூலமாக்கப்பட்ட இக் கோவில், சைவத் தமிழ் அறிஞர் ஆறுமுக நாவலர் பெருமானின் முயற்சியால் மீண்டும் கட்டியெழுப்பட்டபோதும் துரதிஷ்டவசமாக, 1918 ஆம் ஆண்டில் எதிர்பாராத விபத்தில் தீக்கிரையானது.

பரம்பரை பரம்பரையாக, இக் கோயிலை நிர்வகித்து வந்த முன்னைநாள் ஆதீனகர்த்தாவான ஸ்ரீலஸ்ரீ குமாரசுவாமி குருக்களின் மறைவைத் தொடர்ந்து, அவரது மகனான இன்றைய ராஜராஜ ஸ்ரீ நலகுலேஸ்வரக் குருக்கள் 1947 ஆம் ஆண்டில் பிரதம குருக்களாக அமர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது 22. நகுலேஸ்வர குருக்களின் இறைபக்தியும் அர்ப்பணிப்புமே இன்று வரை இவரை இக் கோயிலுடன் இரண்டற இணைத்துள்ளது.

திருக்கோவில் புனருத்தாரண பணிகளுக்கான நிதியைத் திரட்டும் பேரவாவுடன் 1987 இல் பிரித்தானியாவுக்கு வருகை தந்த நகுலேஸ்வரக் குருக்கள் இறை யன்பு மிக்க பல பெரியோர்களின் ஒத்து ழைப்புடன் 40 அங்கத்தவர்கள் கொண்ட அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

நகுலேஸ்வர ஆலய அறக்கட்டளையின் பிரித்தானிய கிளைத் தலைவரான வைத்தியர் சி.நவரட்ணத்தையுடம், செயலாளரான கந்தையா சிவகுமாரையும், பொருளாளராக இரத்தினம் பத்மநாதனையும் நியமித்தார். காலப் போக்கில், பொருளாளர் பதவியில் இருந்து இரத்தினம் பத்மநாதன் ஓய்வு பெற தீர்மானித்தபோது, அவரது இளைய சகோதரர் இராமநாதன் பொருளாளர் பொறுப்பை ஏற்று இன்று வரை திறம்படச் செயற்பட்டு வருகிறார் இடைக் காலத்தில் சிவாதம்பு அறக்கட்டளையின் திருப்பணிகளோடு இணைந்து செயற்பட விரும்பிய போது, அவரையும் இணைப்பாளராக ஏற்று இன்றுவரை அவரும் அரிய சேவை ஆற்றி வருகின்றார்.

அறக்கட்டளையின் ஆரம்பகாலத்தில் நகுலேஸ்வரத்தின் முக்கிய தேவையாக "அசையாமணி" மற்றும் "மணிக்கோபுரம்" போன்ற திருப்பணிகளை நிறைவேற்றித் தருமாறு அன்பான வேண்டுகோள் விடுத்தார் குருக்கள். இத் திருப்பணியை பூர்த்தி செய்ய 50,000 பிரித்தானிய பவுண்கள் தேவைப்பட்டன. 1990 ஆம் ஆண்டு சித்திரை திங்களில் வைத்தியர் சி.நவரட்ணம் அவர்களது பெரு முயற்சியினால் இந்தியாவில் பெரும் புகழ் பெற்ற நடனதாரகை சித்ரா விஸ்வேஸ்வரனின் நடன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அதன் மூலம் பெரு நிதியும் திரட்டப்பட்டது.

நிதிதிரட்டும் அதேவேளையில், கோவிலுக்கான அசையா மணியினைச் செய்வதற்கான ஏற்பாடுகளும் பிரித்தானியாவில் கொவென்றி எனும் இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

## திரளும் பக்த கோடிகளுக்கு மத்தியில் ஞாயிறன்று மஹா கும்பாபிஷேகம்

1990 இல் இலங்கையின் உக்கிர மான போர் நடந்த காலம் அது. ஆடி அமாவாசை அன்று நகுலேஸ்வரம் குண்டு வீச்சுக்கு இலக்கானது. பல நூறு அடியார்கள் பாதிக்கப்பட்ட அக்கோர சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் குருக்களும் அவரது குடும்பத்தவர்களும்.

மனம் தளராத குருக்கள் பிரித்தானிய அறக்கட்டளையின் அழைப்பை ஏற்று 1991 இல் மீண்டும் பிரித்தானியாவுக்கு வருகை தந்தார். பல வாரங்கள் பிரித்தானியாவில் தங்கி கோவில் புனருத்தாரண நிதி சேகரிப்பில் மும்முரமாக ஈடுபட்டார். ஈஸ்ற்ஹாம் முருகன் கோவில், உயர்வாசற்குன்று முருகன் கோவில், விம்பிள்டன் பிள்ளையார் கோவில் போன்ற ஆலயங்கள் மற்றும் அவருக்கு முன்பே அறிமுகமான பிரமுகர்களையும் அணுகி, அறக்கட்டளை மூலமாகவோ, தனிப்பட்ட முறையிலோ நிதி உதவி செய்யுமாறு மிக அன்போடு கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பல தடவைகள் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்து, அறக்கட்டளையினர் ஒழுங்கு செய்த பல கூட்டங்களில் முதன்மையாக இருந்து பணியைத் தொடர்ந்த குருக்கள் கையாண்ட பெரும் உபாயம் ஒன்று பலரையும் ஈர்த்தது.

இலங்கையில் நகுலேஸ்வரத்துடன் விசுவாசமாக இருந்த பலர் முன்னைநாள் பெரியோர்களின் பிள்ளைகள், உறவினர்கள் பிரித்தானியாவிலும் ஏனைய உலக நாடுகளிலும் வாழ்கின்றமையை இனங்கண்டு, விவரங்களை அறிந்து அவர்களைச் சந்தித்தார். கோவிலின் ஒவ்வொரு வாசல்களையும் கட்டுவதற்கான நிதியை பொறுப்பேற்க வேண்டிய தார்மீக கடமை அவர்களுக்கு உண்டு என்பதை வாஞ்சையுடன் உணர்த்தி உதவிக் கரம் நீட்டுமாறு வேண்டிக் கொண்டார். குருக்கள் ஐயாவின் தொடர்ச்சியான பிரித்தானிய விஜயத்தின் போதெல்லாம், அவருக்கான அனைத்து தங்குமிட வசதிகளையும் தனது வீட்டிலேயே ஒழுங்கு செய்து உதவிய பெருமைக்குரியவர் அறக்கட்டளையின் செயலாளர் வைத்தியர் சிவகுமார் அவர்களே.

கோவில் புனர்நிர்மாணப் பணிகளில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துக் கொண்டவர் ஸ்ரீலஸ்ரீ நலகுலேஸ்வரக் குருக்கள். கட்டட நிர்மாண மேற்பார்வையாளர்களுடன் ஒன்றாக வேலைத் தளங்களில் நின்று, காலநிலைகளையும் கவனத்தில் கொள்ளாது கடினமாக உழைத்தார். கோவில் புனர் நிர்மாணப் பணிகள் தடங்கல் ஏதுமின்றி பெரும ளவில் நடந்தேற வழிகோலியது, ஐயா அவர்களின் விடாமுயற்சியும் தளராத திடசங்கற்பமுமே என்றால் மிகையாகாது.

அதேவேளையில், கோவிலின் இதர கட்டட திருப்பணிகளுக்கான நிதியை சேகரிக்கும் முகமாக, முழுமூச்சுடன் செயற்பட்ட அறக்கட்டளையினர், பிரித்தானியாவில் ஒழுங்கு செய்த கலை நிகழ்ச்சிகளில் 15.04.1990 இல் இந்தியாவின் தலைசிறந்த நடனத்தாரகை சித்ரா விஸ்வேஸ்வரன், 29.07.2007 இல் இசையரசி பூசணி கல்யாணராமனின் சங்கீதக் கச்சேரியும் அவரது நகுலநாதம் "இசைப் பேழை" வெளியீடு, 04.04.2009 இல் லூயிஷம் சிவன் கோவிலில் நடைபெற்ற ரங்கநாதன் தர்ஷணன் எனும் இசைக் கலைஞரின் சங்கீதக் கச்சேரி, 14.10.2012 இல் இல்பேர்ட் செல்வ விநாயகர் ஆலயத்தில் மலேசிய ா நாட்டைச் சேர்ந்த இராஜ ராஜசோழன் எனும் கலைஞரது இசை நிகழ்ச்சி, 14.06.2014 இல் இந்திய இசைக் கலைஞரான சாருலதா மணி அவர்களது இசைக் கச்சேரி, 17.09.2016 இல் உயர் வாசல்குன்று முருகன் ஆலயத்தில் நடைபெற்ற இசையரசி பூசணி கல்யாணாமன் மற்றும் அவரது கோஷ்டியினரின் இசைக் கச்சேரிகள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் சேகரிக்கப்பட்ட பெரும் தொகையிலான நிதியம் கோவிலின் புனருத்தாரணம் முதல் இராஜகோபுரம் வரையில் கணிசமான அளவில் உதவியமை பெருமைக்குரிய விடயமாகும்.

29.07.2007 ஆம் ஆண்டில் நகுல நாதம் "இசைப் பேழை" வெளியீட்டின் போது ஸ்ரீலஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களும் அவரது துணைவியாரும் கலந்து சிறப்பித்தமை சிறப்பு மிக்க அம்சமாகும்.

2012 ஆம் ஆண்டில், பக்த கோடிகள் அனைவரதும் உள்ளங்கள் உவகையால் பொங்க, குருக்கள் ஐயா ஆசியுடன் கோலாகலமாக நடந்தேறியது கும்பாபிஷேகம். இந்தியாவில் இருந்து பல சிவாச்சாரியார்கள், குருக்கள் ஐயாவின் பிள்ளைகள் மருமக்கள் விழாவில் கலந்து சிறப்பித்தனர். இந்தியாவின் பிரபல இசை மேதை கலைமாமணி பூசணி கல்யாண ராமன் அவர்களும் அவரது கோஷ்டியினரும், கேரளாவில் புகழ் பெற்ற



ஜெண்டைமேள கோஷ்டியினரும் மற்றும் உள்நாட்டு நமது கலைஞர்களது மேளம், தவில், நாதஸ்வரம் என அமர்க்களமாகவும், மங்களகரமாகவும் மிளிர்ந்தது நகுலேஸ்வரம் சிவன் கோவில். இந்திய தூதரக பிரதிநிதி மகாலிங்கமும், முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கும்பாபிஷேகத்துக்கு சமுகமளித்து சிவனைத் தரிசித்தனர்.

கும்பாபிஷேகம் முடிவுற்ற போதும் கூட, திருப்தி கொள்ளவில்லை குருக்கள் ஐயா உள்ளம். இராஜகோபுரம் ஒன்றை அமைக்கும் பணி பற்றி தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

**-நடராஜா சச்சிதானந்தன்**

நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள விவகாரம்

# இரட்டைக் குடியுரிமை

## திருத்தச் சட்டம் ‘19’ பலருக்கு வைத்துள்ள ஆப்பு

சட்டத்தரணி (பாடும்மீன்)
**சு.ஸ்ரீகந்தராசா**

இரட்டைக் குடியுரிமை என்றால் என்ன? அது எப்படி எடுக்கப்படுகிறது? அதனை எப்படிக் கைவிடலாம்? கைவிடுவதென்றால் எந்த நாட்டுக் குடியுரிமையைக் கைவிடலாம்? என்பது பற்றியெல்லாம் எந்தவிதத் தெளிவும் இல்லாமல் சில ஊடகங்களில் செய்திகள் என்ற பெயரில் தகவல்கள் வெளிவருகின்றன. அப்படிச் செய்ய முடியும், இப்படிச் செய்யமுடியாது, அவரால் கைவிடவே முடியாதாம், இவரால் இரண்டு மாதங்களில் கைவிட முடியுமாம் என்றெல்லாம் நக்கலாகவும், நகைச்சுவையாகவும் கூடச் சில செய்திகளைப் பார்க்கிறோம்.

அதனால், இரட்டைக் குடியுரிமை பற்றிய சில விடயங்களையும், இலங்கை அரசியலில் அதன் தார்பரியங்களையும் பற்றிச் சில தகவல்களை இக் கட்டுரையில் தர விரும்புகின்றேன்.

இந்த வாய்ப்பு முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபயராஜபக்ஷவால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பின்னர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்ததற்குப் பின்னர், மீண்டும் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரட் டைக் குடியுரிமையை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. வேறு நாடுகளில் குடியுரிமையைப் பெற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் அன்றிலிருந்து இதுவரை இரட்டைக் குடியுரிமையைப் பெற்றிருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதனைப் பெற்றவர்கள் உள்ளார்கள்.

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, இன்றுவரை அமுலில் இருக்கும் இலங்கை அரசமைப்புக்கு இவ்வருட ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தலே 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் முக்கிய நோக்கமாக இருந்த போதிலும், மேலும் சில விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அரசமைப்பின் 91 ஆவது பிரிவுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தமும், சிறப்பாக இரட்டைக் குடியிரிமையுள்ளோர் பற்றிய விடயமும் ஒன்றாகும்.

**வெறு நாட்டில் குடியுரிமை பெறுகின்ற போது இலங்கை குடியுரிமை ரத்தாகும்**

இலங்கைப் பிரசை ஒருவர் வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறுகின்ற போது அவரது இலங்கைக் குடியுரிமை இயல்பாகவே இரத்தாகிவிடும் என்பது



சட்டத்தின் ஏற்பாடாகும். ஆனால், அவ்வாறு வேறு நாடு ஒன்றில் குடியுரிமை பெற்றுக் கொண்டவர் இலங்கைக் குடியுரிமையையும் தக்கவைத்துக் கொள்வதற்கான ஏற்பாடே இரட்டைக் குடியுரிமையைப் பெறுவதாகும்.

பிற நாடு ஒன்றின் குடியுரிமையைப் பெற்றுக்கொண்ட பின்னர் அல்லது அவ்வாறொன்றினைப் பெறுவதற்கு முன்னராயின் அதற்கான வாய்ப்பு இருப்பதை நிரூபிப்பதன் மூலம் இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்ட ஒருவர் இலங்கையைப் பொறுத்தவரை மற்றைய பிரசைகளைப்போல வழமையான இலங்கைப் பிரசையாகத்தான் சட்டத்தினால் கணிக்கப்படுகின்றார். இலங்கைப் பிரசை ஒருவருக்கு உள்ள எல்லாவிதமான உரிமைகளும் அவருக்கு உண்டு. 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை இதுதான் நிலைமையாக இருந்தது.



ஆனால், 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், அரசமைப்பின் 91 ஆவது உறுப்புரையில் சேர்க்கப்பட்ட ஒரு வரி இரட்டைக் குடியுரிமை உள்ளவரது உரிமை ஒன்றினைப் பறித்து விட்டது. அரசமைப்பின் 91 ஆவது பிரிவு, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையீனங்களைக் குறிப்பிடுகின்றது.

அதில். முதலாம் பந்தியில் 13 ஆவது விடயமாக வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவும் உள்ள இலங்கைப் பிரசை ஒருவர் (a citizen of Sri Lanka who is also a citizen of any other country) என்கின்ற வரி 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது.

அதாவது இலங்கைப் பிரசை ஒருவர் வேறு ஏதாவது நாட்டின் பிரசையாகவும் இருந்தால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப் படவோ அல்லது நாடாளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்புக்களில் கலந்து கொள்ளவோ முடியாது. எனவே இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருப்போர் இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவர்களாவர்.

**19 ஆவது திருத்தங்கள்...**

இலங்கைப் பிரசை அல்லாதவர்கள் எவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட முடியாது என்று அவ்வாறு தெரிவுசெய்யப்படுவதற்கு ஒருவர் இலங்கப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்று அரசமைப்பின் 89 ஆவது உறுப்புரை கூறுகின்றது. 19 ஆவது திருத்தச் சட்டமோ அத்தகைய ஒருவர் இலங்கை பிரசையாக மட்டுமே இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றது.

சரி நாடாளுமன்ற உறுப்பினராகத் தானே வரமுடியாது, மாகாணசபை உறுப்பினராக வரலாம்தானே என்று சிலர் நினைக்கலாம். மாகாணசபைகள் சட்டம் அதற்கும் ஓர் ஆப்பு வைத்திருக்கிறது. அதாவது, அரசமைப்பின் 91(1) ஆவது உறுதியுரையின் கீழ்த் தகைமையற்றவர்கள் மாகாண சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவோ அல்லது சபை அமர்வுகளில் உறுப்பினராக அமரவோ வாக்களிக்கவோ முடியாது என்று 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டம் கூறுகின்றது.

எனவே 19 ஆவது திருத்தத்தின் காரணமாக இரட்டைப் பிரசாவுரிமையுள்ளவர்கள் மாகாண சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட முடியாதவர்களாகின்றார்கள்.

சட்டம் இப்படியிருக்கையில், 2015 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இரட்டைக் குடியுரிமை உள்ள சிலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என செய்திகள் வந்தன. இது எவ்வாறு சாத்தியமாக முடியும் என்பதைச் சற்று கருத்தில் எடுத்துக் கொண்டால் விநோதமான விடயங்கள் பல நமக்குத் தோன்றுகின்றன. அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

**விநோதமான விடயங்கள்**

1) 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும்போது ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக இருந்த ஒருவர் இரட்டைப் குடியுரிமையினைக் கொண்டிருந்து, அவர், மற்றைய நாட்டின் குடியுரிமையினை இரத்துப் பண்ணுவதில் கவனம் செலுத்தாமலோ அல்லது இரத்துப்பண்ணுவதற்கு விண்ணப்பித்தும் தேர்தல் திகதிவரை சட்டரீதியான இரத்துப்பண்ணல் நடவடிக்கை பூர்த்தியடையாமலோ இருந்திருக்கலாம்.

2) வெளிநாடொன்றின் குடியுரிமையுள்ள ஒருவர், அதன் காரணமாக இலங்கைக் குடியுரிமையை இழந்தவராக இருந்து, இப்போது தேர்தலில் போட்டியிடுவதற்காக இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்து, அந்த விண்ணப்பத்தின் பேரிலான நடவடிக்கை இன்னமும் முடிவுறாதிருந்திருக்கலாம். அதாவது இரட்டைக் குடியுரிமை அவருக்கு இன்னமும் வழங்கப்படவில்லை.

ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரட்டைப் பிரசா உரிமை வழங்கல், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்ததற்குப் பின்னர், கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதிதான் மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

சில மாதங்களிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால், இரட்டைப் பிரசா உரிமையைப் பெறுவதற்கு அவகாசம் இல்லாத நிலைமை பலருக்கு இருந்தது. அது வழங்கப்படாத நிலையில் அவர் தனது வெளிநாட்டுக் குடியுரிமையை இரத்துப் பண்ணியிருக்க வாய்ப்பில்லை. இரத்துப் பண்ணும் விண்ணப்பத்தை அவர் செய்திருந்தாலும், அவர் தேர்தல் நடைபெறும் போது இலங்கைப் பிரசையாகிவிடவில்லை. அதனால் அவர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட முடியாது.

3.ஏதோ ஒரு வழியாக மிக விரைவாக எவரேனும் ஒருவர் இரட்டைக்குடியுரிமையைப் பெற்றிருந்தால் அல்லது ஏற்கனவே இரட்டைக் குடியுரிமை உள்ளவராக இருந்திருந்தால் அவருக்குத்தனது வெளிநாட்டுக் குடியுரிமையைச் சட்டரீதியாக இரத்துப்பண்ணுவதற்கான அவகாசம் இருந்திருக்கவில்லை. ஏனெனில் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கும் நாடாளுமன்றக் கலைப்பிற்கும் இடைப்பட்ட காலம் சில மாதங்களே ஆகும்.

மேற்கத்திய நாடுகளில், சாதாரணமாகக் குடியுரிமையை இரத்துப் பண்ணுவதாயின் ஆகக் குறைந்தது இரண்டு மாதங்கள் தேவைப்படும். மற்றுமொரு நாட்டில் குடியுரிமையைப் பெற்றமையை அல்லது பெற விருப்பதை நிரூபித்தாலன்றி அத்தகைய நாடுகள் தங்கள் நாட்டில் ஒருவருக்குள்ள குடியுரிமையை இரத்துப்பண்ணும் விண்ணப்பத்தை அங்கீகரிக்க மாட்டாது. தங்கள் நாட்டுக்குடியுரிமையை இழப்பதன்மூலம் எவரும் நாடற்றவராக ஆகிவிடக்கூடாது என்ற நிலைப்பாடே அதற்கான காரணமாகும்.

4.இப்பொழுது மாகாண சபை உறுப்பினர்களாக இருப்பவர்களில் எவராவது இரட்டைக் குடியுரிமையுள்ளவராக



இருக்க லாம். கடந்த வருடம் கலைக்கப்பட்ட மாகாண சபைகளில் உறுப்பினர்களாக இருந்தவர்களில்கூட அத்தகையோர் இருந்திருக்கலாம். ஏனெனில் கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது இரட்டைக்குடியுரிமையுள்ளோர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட முடியாது என்ற நிலை இருந்ததில்லை. அத்தகையவர்களும் புதிய சட்டத்திருத்தத்தின் படி தமது பதவிகளை இழக்கவேண்டி வரலாம்.

5) 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மிகக் குறுகிய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டதால் வேட்பாளர்களின் இரட்டைக் குடியுரிமைத் தகைமையீனத்தைப் பரிசீலித்துப் பார்க்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(13 ஆம் பக்கம் பார்க்க....)





# கல்விக் கதிர் வெளியீடு 03


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர்





## பகுதி – I





★ 01 தொடக்கம் 34 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
★ வினாக்களில் உள்ள உருவங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

01. 
1) பலகை
2) இரும்பு
3) தளபாடம்

02 
1) மழை
2) வெயில்
3) அழகு

★ 03ஆம், 04ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட உருவுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

03.  1)  2)  3) 

04.  1)  2)  3) 

★ சரியான விடைகளைத் தெரிவு செய்க.

05. சிறு பிள்ளைகள் மூத்தவர்கள் சொற்கேட்க வேண்டும். இதற்குக் காரணம்

1) சிறு பிள்ளைகள் நல்லவை தீயவை யாவை என்று அறிந்திராமை.
2) மூத்தவர்கள் சிறுபிள்ளைகளிலும் வயது கூடியவராக இருக்கின்றமை.
3) சிறுபிள்ளைகள் மூத்தவர்களை விட அறிவில் குறைந்தவர்களாக இருப்பது.

06. ஒரு நிரையில் ஆண் பிள்ளைகள் வரிசையாக நின்றனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும் போது பிரபு 19 ஆவதாக நின்றிருந்தான். மறு பக்கத்திலிருந்து கணக்கெடுக்கும்போது, அவன் 8 ஆவதாக நின்றிருந்தான். எனவே அந்நிரையில் எத்தனை ஆண் பிள்ளைகள் நின்றிருந்தனர்?





1) 26 2) 27 3) 28





07. சந்தைக்கு வடக்கே கோவில் உள்ளது. பாடசாலைக்கு வடக்கே சந்தை உள்ளது. ஆகவே,
1) பாடசாலைக்குத் தெற்கே கோவில் உள்ளது.
2) கோவிலுக்குத் தெற்கே பாடசாலை உள்ளது.
3) கோவிலுக்கு வடக்கே பாடசாலை உள்ளது.

★ பின்வரும் வினாவில் நிகழ்வானது ஒழுங்கு வரிசையில் தரப்படவில்லை. அந்த நிழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துமபோது நடுவில் வரும் விடையின் கீழ்க் கோடிடுக.

08. **A** - மேலதிக வீட்டுப் பயிற்சிகளை வழங்கிச் செல்கின்றார்.
**B** - பயிற்சிகள் கொடுத்துத் திருத்துகின்றார்.
**C** - ஆசிரியர் வகுப்பறைக்குள் வருகின்றார்.
**D** - தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கின்றார்.
**E** - மாணவர்கள் எழுந்து வணக்கம் கூறுகின்றனர்.

★ 09ஆம், 10ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருக்களை ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது தோன்றும் உரு எது?

 1)  2)  3) 

 1)  2)  3) 

# மயிலும் வான்கோழியும்



காட்டில் இருந்த பறவைகள் எல்லாம் ஒரு பெரிய மாநாடு கூட்டின. அந்த மாநாட்டுக்கு எல்லாப்பறவைகளும் வந்திருந்தன. பறவைகள் முன்னேற்றத்தைக் குறித்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு முடிவில் ஒரு நடன அரங்கேற்றம் ஏற்பாடாகியிருந்தது. திட்டப்படி கடைசியில் மாநாட்டு மேடையின் மீது ஏறி மயில் நடனம் ஆடியது.

நீலப்புள்ளிகள் நிறைந்த அழகிய பச்சைத் தோகையை விரித்து மயில் ஆடிய நடனம், பார்க்கப் பார்க்க இன்பமளிக்கும் காட்சியாய் இருந் தது.



பறவைகள் மயிலை மிகவும் பாராட்டின. அதன் அற்புதமான நடனத் திறன் குறித்து அவை புகழ்ந்து பேசின. பல பரிசுகளும் மாநாட்டின் சார்பில் மயிலுக்கு வழங்கப் பெற்றன.

இவற்றையெல்லாம் ஒரு வான் கோழி பார்த்துக் கொண்டிருந்தது. மாநாட்டுத் தலைவரிடம் போய், நானும் நடன அரங்கேற்றம் நடத்த அனுமதி கொடுங்கள் என்று கேட்டது.

நீயா? என்று வியப்புடன் கேட்டது மாநாட்டுத் தலைவராக இருந்த பருந்து.

ஏன், ஆச்சரியப்படுகிறீர்கள்? என்னையும் ஆடவிட்டுப் பாருங்கள். வாய்ப்புக் கொடுத்தால் தானே திறமை இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ளலாம்? என்று அடித்துப் பேசியது வான்கோழி.

மாநாட்டுத்தலைவர் பருந்து, அனுமதி கொடுத்து விட்டது.

வான்கோழி மேடையின்மீது ஏறியது, வால் போல் நீண்டிருந்த தன சிறகுகளை விரித்துக் கொண்டு,அது நடனம் ஆடியது வேடிக்கையாக இருந்தது. எல்லாப் பறவைகளும் கேலி செய்து சிரித்தன.

அவமானம் தாங்க முடியாமல் வான்கோழி மேடையை விட்டு இறங்கி ஓடிவிட்டது.

**கருத்துரை:** மயில் ஆடு வதைப் பார்த்த வான்கோழி தானும் அது போல் ஆடமுடியும் என்று கருதியது. இது தவறு. கல்வியில்லாதவர்கள் கவிதை எழுத முயல்வது வான்கோழியின் செயல் போன்றதுதான்.

நிறம் தீட்டுக



# மட்டக்களப்பில் இந்த ஆண்டு முடிவதற்குள் 200 வீடமைப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்

மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு முடிவதற்குள் 200 வீடமைப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஏறாவூரில் 43 நவோதய வீடுகளும் நலனோம்புத் திட்டங்களும் கையளிக்கப்பட்ட நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 100 வீட்டுத் திட்டங்களைத்தான் அமைப்பது என்று ஏற்கெனவே எனக்குள் இருந்த முடிவை மாற்றிக் கொண்டுள்ளேன். மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் பொது மக்களின் ஆர்வத்தைப் பார்க்கின்ற பொழுது இந்த வீடமைப்பு இலக்கை இருமடங்கு அதிகரிக்கத் தீர்மானித்துள்ளேன்.


அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

நான் செய்வதைத்தான் சொல்வேன் சொன்னதைச் செய்வேன். ஏனென்றால், என் தந்தையும் அவ்வாறே செயற்பட்டவர்.

எனது வேகத்திற்கு ஈடு கொடுத்து எவரும் சரி சமனாகவும் ஓட முடியாது. என்னைப் பின் தொடர்ந்து எட்டிப் பிடிக்கவும் முடியாது.

கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைரின் வேண்டுகோளுக்கிணங்க வடிச்சல் கிராமத்தில் 50, உறுகாமம் கிராமத்தில் 75 வீடுகளும் அடுத்த மாதம் 28 ஆம் திகதி அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைக்கப்படும், அதே போல ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க சவுக்கடி 50, களுவங்கேணி 25, ஐயன் கேணி 25 என தமிழ் பிரதேசத்திற்கும் 100 வீடுகள். எதிர்வரும் 25ஆம் திகதி இந்த வீடுகளுக்கான அடிக்கல் நடப்படும்.

வீடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் திகதியை மட்டுமே அதிகாரிகளிடம் கேட்டு தீர்மானித்துக் கொண்டுள்ளேன்.

இந்த நாட்டில் இன மத பேதங்களை ஏற்படுத்தி உள்ளொன்று வைத்து புறமொன்று பேசிநிறம்மாறித்திரியும் ஓணான்களாகவே பல அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களே பலாத்காரமாக இப்தார் நிகழ்விலும் கலந்து கொள்கின்றார்கள்.

இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளை ஏற்படுத்தி இந்த நாட்டுக்குத் தீவைத்து அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் இருக்கின்றார்கள். மக்களால் விரட்டப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

அப்படிப்பட்டவர்கள் இனியும் இந்த நாட்டுக்குத் தேவையில்லை. இந்த நாட்டுக்குத் தீ வைப்பவர்கள் இனி ஒரு போதும் தேவையே இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஸம் ஸம் கிராமம் மற்றும் ஸகாத் கிராமம் ஆகிய இரு மாதிரி எழுச்சிக் கிராமங்களில் 43 புதிய வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான நீர்மற்றும் மின்சார வசதி, உள்ளகப் பாதை வசதி, பிரவேசப் பாதை வசதி ஆகியனவும் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

மேலும், 43 குடும்பங்களுக்கு வீடுகளுக்கான உரிமைப் பத்திரம், பயனாளிகள் 170 பேருக்கும் மொத்தமாக 85 இலட்சம் ரூபா வீடமைப்புக் கடன் மற்றும் உதவி வழங்கல், பயனாளிகள் 70 பேருக்கு விசிரி திட்டத்தின் கீழ் தலா ஒரு இலட்ச ரூபா இலகு கடன்களுக்கான காசோலை வழங்கல், பயனாளிகள் 25 பேருக்கு சொந்துருபியச எனும் திட்டத்தின் கீழ் தலா 2 லட்ச ரூபா வீடமைப்புக் கடன் வழங்கல், சில்பசவிய எனும் திட்டத்தின் கீழ் கட்டடத் தொழிலாளி பயிலுநர்கள் 50 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா உதவு தொகை வழங்குதல் மேலும் கண்பார்வைக் குறைபாடுள்ள 258 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கல். அத்துடன், பயனாளிகள் இருவருக்கு காணி உரிமைப் பத்திரம் என்பனவும் அமைச்சரால் வழங்கப்பட்டன.

## ஜொலிக்கும் கலசங்களுடன்...

மீண்டும் பிரித்தானிய அறக்கட்டளையினரை அணுகி பொறுப்பேற்கும் படி கேட்டுக்கொண்டார். 'முயற்சி திருவினையாக்கும்." என்பதற் கொப்ப, கோபுரத்தில் பதிக்கவிருந்த செங்கற்களை, குருக்கள் ஐயா அவர்கள் நகுலேஸ்வரக் கோவில் வாயிலில் இருந்தபடி உள்நாட்டு வெளிநாட்டு அடியார்க ளுக்கு விற்பனை செய்து நிதி சேகரித்த சிறப்பான தொண்டினை வியக்காதார் இல்லை. நகுலேஸ்வரப் பெருமானின் கருணையினால் கோபுர வேலைகளும் ஆரம்பமாகின. இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட சிற்ப நிபுணர்களும் இலங்கையின் தலைசிறந்த சிற்பிகளுமாக ஒருங்கிணைந்து இராஜகோபுரத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டனர். இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட சமையல்காரர்கள் கீரிமலையில் தங்கியிருந்து இந்திய சிற்பிகளுக்கான உணவுகளை தயாரித்து வழங்கியமை இன்றும் பலராலும் பேசப்படுகின்றது.

இராஜகோபுர பணிகள் நடைபெற்ற வேளையில், தன் பாட்டனாரின் நாமத்தை தன் நாமமாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களின் மகனான ஸ்ரீலஸ்ரீ குமாரசுசாமிக் குருக்கள் அவர்கள் கனடாவில் இருந்து வருகை தந்து, தந்தையாருக்கு பல வழிகளிலும் உதவியாக இருந்தார்.

இந்த இராஜகோபுர கட்டமைப்பில் பிரித்தானிய அறக்கட்டளையினர் பங்கு மிகவும் வலுவான ஒன்றாகும். நிதி உதவி கோரும் மனுக்களைத் தயார் செய்து, அவற்றை இறையன்பும் கருணை உள்ளமும் கொண்ட தனிப்பட்டோருக்கும், பிரித்தானிய சைவக் கோவில்களுக்கும் சேர்ப்பித்து, அதன் மூலம் கிடைக்கப் பெற்ற நிதி இராஜகோபுர வளர்ச்சிக்கு பெரிய அளவில் உதவியமையில் வேற்றுக் கருத்து இருக்க முடியாது.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்கள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வானளாவ உயர்ந்து நிற்கும் இராஜகோபுரம் நம் நாட்டு பக்த கோடிகளை மட்டுமன்றி, வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளையும் பெருமளவில் கவர்ந்து வருவது கண்கூடு.

சைவக் கோவில்களின் முக்கியமான அடையாளம், வானளாவி நிற்கும் இராஜகோபுரத்தின் மேல் கம்பீரமாக ஜொலிக்கும் கோபுர கலசங்களே, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, நகுலேஸ்வரக் கோவிலில் மின்னும் கோபுரக் கலசங்களில் ஆறு கலசங்கள் பிரித்தானிய அறக்கட்டளையினராலும் மூன்று கல சங்கள் உள்ளூர் மக்களின் பங்களிப்பினாலும் உருவானவையே.

2018 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் மீண்டும் ஒரு திருப்பணியை குருக்கள் ஐயா முன்வைத்தார். அத்திருப்பணி கோவிலுக்கான 'திருக்கதவு'. இத்திருக் கதவுக்கான செலவு 32, 000 பிரித்தானிய பவுண்கள். 30 அடி உயரம் 14 அடி அகலம் கொண்ட, தேக்கு மரத்தாலான, காரைக்குடி சிற்பிகளால் செதுக்கப்பட்ட இத் திருக்கதவு நகுலேஸ்வரரின் திரு ஆலயத்தை அலங்கரிக்கும் நாள் அண்மித்து வருகின்றது. அலங்காரமான கதவு பூட்டப்பட்டு, ஒன்பது கலசங்கள் சூட்டப்பட்டு, ஆனித் திங்கள் பதினேழாம் நாளில், – அதாவது நாளைமறுதினம் ஞாயிறன்று (01.07.2018) – கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி தேவஸ்தான சிவமஹா இராஜகோபுர பிரதிஷ்டா 'மஹா கும்பாபிஷேகம்' நடைபெற இறையருள் கூடியுள்ளது.

## ஆட்ட நிர்ணயக்காரர்களின் வருமானத்தை சோதனை செய்ய வேண்டும்: அர்ஜுன ரணதுங்க

இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியடையும் போட்டி இடம் பெறுகின்ற தினங்களில் இந்த நாட்டில் உள்ள ரேஸ்புக்கிங் மற்றும் ஆட்டநிர்ணயம் செய்பவர்களின் வருமானத்தை சோதனை செய்ய வேண்டும் என பெற்றோலியவளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் கிரிக்கெட் விளையாடும் காலங்களில் ஆட்டநிர்ணயம் என்பது இருக்கவில்லை. ஆனால் இன்று சூதாட்ட வியாபாரிகள் கிரிக்கெட் நிர்வாகத்திற்குள் வந்து கிரிக்கெட்டை சீரழித்துள்ளனர்.

இவ்வாறான இழிவான செயல்களினால் கிரிக்கெட் விளையாட்டு கீழ்நிலைக்கு சென்றுவிட்டது. இதை நிறுத்த முடியாத நிலையில் நாம் உள்ளோம். இதற்கு காரணம் சூதாட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களே கிரிக்கெட் நிர்வாகத்தில் உள்ளனர். இதன் பிரதிபலிப்பே நாம் கிரிக்கெட்டில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வருகின்றோம்.

அத்துடன், இலங்கை அணி தோல்வியடையும் போட்டி இடம் பெறுகின்ற காலங்களில் சூதாட்டக்காரர்களின் வருமானத்தை கவனிக்க வேண்டும். இன்று கிரிக்கெட் நிர்வாகத்தில் உள்ளவர்கள் உயர் மட்டத்தில் இருப்பதற்கு காரணம் அவர்கள் சூதாட்டம் மற்றும் புக்கிங் காரர்களுடன் தெடர்பு வைத்திருப்பதே. இதன் காரணமாகத்தான் போட்டியில் தோல்வியும் ஆட்ட நிர்ணயமும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உள்ளதாக தென்படுகின்றது.

எனவே, ஆட்ட நிர்ணயம் செய்பவர்களின் வருமானத்தை சோதனை செய்ய வேண்டும் என்ற எழுத்துமூலமான கோரிக்கையொன்றை நிதியமைச்சர் மங்கள சமவீரவுக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மரக்கறி வகைகளின் விலை அடுத்த மாதத்தில் குறையும்!

மலையக பகுதியில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அந்தப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டமையினால் அதற்கு விலை அதிகரித்துள்ளது என்று விவசாய திணைக்களம் விவசாய அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் மற்றும் ஜூன் மாதங்களில் மலையக மரக்கறி வகையின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்று விவசாய திணைக்களம் முன்கூட்டியே அறிவித்திருந்தது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதாக விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டபிள்யூ.எம்.எம்.வீரகோன் விவசாய அமைச்சரிடம் தெரிவித்திருந்தார்.

விவசாய அமைச்சில் நடைபெற்ற "நாம் உற்பத்தி செய்வோம் நாம் உண்போம்" என்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அனைத்து நிறுவனங்களுடனும் அமைச்சர் பேச்சு நடத்தினார்.

இதன்போது அமைச்சர் நாட்டு மக்களால் பயன்படுத்தப்படும் மலையக மரக்கறி வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பினார்.



இரண்டு மாதங்களுக்கு மேலாக நிலவும் சீரற்ற காலநிலையால் மலையகத்தில் மரக்கறி வகை உற்பத்தியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று பதுளை மாவட்டத்தின் உற்பத்திகள் மீது காற்று பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்னும் சில நாள்களுள் மரக்கறி வகையின் விலையில் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### சிங்கப்பூரில் ட்ரம்ப்புக்கு உறுதி அளித்தாலும்

# அணு ஆராய்ச்சி கூடத்தை மேம்படுத்தும் வடகொரியா

### செயற்கைகோள் படங்கள் மூலம் அம்பலம்

சிங்கப்பூரில் ட்ரம்ப்புக்கு உறுதி அளித்திருந்தாலும், வடகொரியா தொடர்ந்து தனது அணு ஆராய்ச்சிக் கூடத்தை மேம்படுத்தி வருகிறது என்று செயற்கைகோள் படங்கள் ஆதாரத்துடன் கண்காணிப்பு அமைப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும் – வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் கடந்த 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். அப்போது, அணு ஆயுதங்களை அழிப்பதற்கு கிம் ஜாங் உன் ஒப்புக்கொண்டார். இது உலக அளவில் வரவேற்கப்பட்டது.

எனினும், எல்லா அணு ஆயுதங்களையும் அழிக்கும்வரை வடகொரியா மீதான பொருளாதாரத் தடை நீடிக்கும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் திட்டவட்டமாக அறிவித்தார்.



இந்த நிலையில், வடகொரியாவின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வரும், '38 நார்த்' என்கிற இணையதளம், வடகொரியா தொடர்ந்து அணு ஆராய்ச்சிக் கூடத்தை மேம்படுத்தி வருகிறது எனக் கூறியுள்ளது.

இதுகுறித்து '38 நார்த்' இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடகொரியாவின் முக்கியமான யாங்பையான் அணு ஆராய்ச்சி கூடத்தில் பணிகள் நடப்பதுடன், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. வர்த்தக செயற்கைகோள் மூலம் கடந்த ஜூன் 21 ஆம் திகதி முதல் பெறப்பட்ட புகைப்படங்கள் அதை உறுதி செய்கின்றன.

மேலும், அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் யுரேனியத்தை செறிவூட்டும் பணிகளும், அணு உலை, இன்ஜினீயரிங் அலுவலகம் போன்ற புதிய கட்டமைப்பு பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன என '38 நார்த்' இணையதளம் பரபரப்பு செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.


(கு)

## பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திடீர் ராஜினாமா!

பாகிஸ்தான் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரலுமான நாசர் ஜான் ஜுவா நேற்றுமுன்தினம் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 2015 ஒக்ரோபர் 23 ஆம் திகதி பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நாசர் ஜான்ஜுவா நியமனம் செய்யப்பட்டார். இந்த நிலையில் அண்மையில் அமைச்சரவையில் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் காலித் நயீம் லோதி சேர்க்கப்பட்டார்.

இதனால், இடைக்கால பிரதமர் நசிருல் முல்குக்கும், நாசர் ஜான்ஜுவாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இதையடுத்து அவர் நேற்றுமுன்தினம் தனது பதவியை திடீரென ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டது என பிரதமர் மற்றும் அமைச்சரவைப் பிரிவு தெரிவித்துள்ளது.



இதேவேளை, நாசர்ஜான் ஜுவா தனது பதவிக் காலத்தின் போது ஆப்கானிஸ்தான் நாட்டுடன் நட்புறவு ஏற்பட வழிவகுத்தார். மேலும் இரு நாடுகளிடையே அமைதிப் பேச்சுக்கான முயற்சிகளையும் அவர் தொடங்கி இருந்தார். இதற்கு முன்பு குவெட்டாவில் உள்ள தெற்கு ராணுவ கொமாண்ட் பிரிவு தலைவராகவும், இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத் தலைவராகவும் நாசர் ஜான்ஜுவா பணியாற்றியிருந்தார்.

## சிரியாவில் 3 மருத்துவமனைகள் மீது அரச படையினர் விமானத் தாக்குதல்

சிரியாவில் கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள் மீது சிரிய அரச படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் மூன்று மருத்துவ மனைகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

சிரியாவின் டெராவில் உள்ள மூன்று நகரங்களில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள் காரணமாக மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன என மனித உரிமை மற்றும் மருத்துவ அமைப்புகள் தெரிவித்துள்ளன.



சைடா நகரில் உள்ள மருத்துவமனை மீது நள்ளிரவில் இடம்பெற்ற விமானத் தாக்குதலை தொடர்ந்து அந்த மருத்துவ மனை செயலிழந்துள்ளது.

இதேவேளை முசாய்பிரா நகரின் மீது ரஷ்ய விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் அந்த நகரின் முக்கிய மருத்துவமனை சேதமடைந்துள்ளது என தெரிவித்துள்ள மனித உரிமை அமைப்புகள் ஜிசா என்ற நகரில் உள்ள மருத்துவமனையும் ரஷ்ய தாக்குதலில் சேதமடைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் மருத்துவ மனைகள் மீது பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள போதிலும் ரஷ்யாவும் சிரியாவும் அதனை நிராகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(கு)

## மைக்கெல் ஜாக்சன் தந்தை ஜோசப் ஜாக்சன் மரணம்!

வொஷிங்டன், ஜூன் 29

பிரபலபொப்இசையின் மன்னர் மைக்கெல் ஜாக்சனின் தந்தை, ஜோசப் ஜாக்சன் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.



பாப் இசையின் மன்னர் என அனைவராலும் பாராட்டப்பட்ட மைக்கல் ஜாக்சன் அமெரிக்க பொப் இசைப் பாடகர், நடன இயக்குநர், பாடல் ஆசிரியர், தொழில் தலைவர், மற்றும் வள்ளல் எனப் பல முகங்கள் கொண்டவர். இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது தந்தை ஜோசப் ஜாக்சன் (வயது 89) லாஸ் வேகாஸ் நகரில் தனிமையில் வசித்து வந்தார். இவரே ஜாக்சன் 5 பிரதர்ஸ் என்ற இசைக்குழுவை உருவாக்கி மைக்கெல் ஜாக்சனை இசை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவர் கடந்த பல ஆண்டுகளாக புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் மாலை உடல்நலக் குறைவால் மரணமடைந்தார். இந்த தகவலை ஜாக்சன் குடும்பத்திற்கு நெருக்கமான ஒருவர் உறுதி செய்துள்ளார்.

## இங்கிலாந்தில் காட்டுத் தீ; மக்கள் வெளியேற்றம்!

லண்டன், ஜூன் 29

வடக்கு இங்கிலாந்தில் காட்டுத் தீ பரவி வருவதால் அந்தப் பகுதியைச் சுற்றி வசிக்கும் ஏராளமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகர் அருகே காட்டுத் தீ பரவி வருகிறது. கடும் வெப்பநிலை காரணமாக ஞாயிற்றுக்கிழமையன்று டவ்ஸ் டோன்ஸ் நீர்த்தேக்கம் அருகே தீப்பிடித்து, பின்னர் அருகில் உள்ள பகுதிகளுக்குப் பரவி யது.



சுமார் 6 கி.மீ. தொலைவுக்கு தீ பரவியதால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. 10 தீயணைப்பு வாகனங்களில் சென்றுள்ள 50 தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்தில் முகாமிட்டு தீயை கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, காட்டு தீயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை அப்புறப் படுத்தும் பணியும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

34 வீடுகளில் வசித்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 24 பெண்களை திருமணம் செய்த மதத் தலைவர் வீட்டுக் காவலில்!

### அவருக்கு 149 பிள்ளைகள்!!

கனடாவில் 24 பெண்களை திருமணம் செய்து 149 குழந்தைகளுக்குத் தந்தையான கிறிஸ்துவ மத தலைவரை வீட்டுக்காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கனடா நாட்டில் பலதார திருமணங்களுக்கு தடை உள்ளது. ஆனால் இதை மீறி பல பெண்களை திருமணம் செய்து கொள்வது வழக்கமாக உள்ளது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் அதற்குத் தண்டனை வழங்கப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் 61 வயது நபர் ஒருவர் 24 பெண்களைத் திருமணம் செய்திருக்கிறார் என குற்றம் சாட்டப்பட்டது. அவரது பெயர் வின்ஸ்டென்ட் பிளாக்மோர். இவர் கிறிஸ்தவ அமைப்பு ஒன்றின் ஆலய மத தலைவராக இருந்து வருகிறார்.

இவர் இளம் வயதில் இருந்தே திருமணம் செய்துகொள்ள தொடங்கி சமீபகாலம் வரை தொடர்ந்து திருமணம் செய்துள்ளார். அவர் திருமணம் செய்தவர்களில் பலர் 15 வயதுடைய சிறுமிகள்.

24 மனைவிகள் மூலம் அவருக்கு 149 குழந்தைகள் உள்ளனர். பலதார திருமணம் தொடர்பாக அவர் மீது பிரிட்டிஷ் கொலம்பியா நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அவரை 6 மாதத்துக்கு வீட்டு காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தொடர்ந்து வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

# இந்தியாவுடனான பேச்சை ஒத்திவைத்தது அமெரிக்கா!

இந்தியாவுடன் உறவை மேம்படுத்த ஜூலை 6 ஆம் திகதி நடைபெற இருந்த உயர்மட்ட பேச்சை அமெரிக்கா ஒத்திவைத்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த முறை அமெரிக்காவுக்குச் சென்றபோது இரு நாடுகள் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது என முடிவெடுக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ஜூலை 6 ஆம் திகதி இந்தியா - அமெரிக்கா இடையிலான உயர்மட்ட பேச்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், அமெரிக்கா வெளியுறவுத்துறை செயலாளர் மைக்கெல் பாம்பியோ மற்றும் பாதுகாப்புத் துறை செயலாளர் ஜேம்ஸ் மாட்டிஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள் எனக் கூறப்பட்டது.

அப்போது, பாதுகாப்புத் துறையில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது, உலகளாவிய மற்றும் பிராந்திய நிலைவரம் குறித்தும் விவாதிக்கப்படும் என தகவல்கள் தெரிவித்தன.

இந்த நிலையில், இந்த சந்திப்பை அமெரிக்கா ஒத்திவைத்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் அதற்கான காரணம் என்ன என்பது பற்றி அமெரிக்கா தெரிவிக்கவில்லை.

### டொலருக்கு நிகரான

# இந்திய ரூபாவின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி



சென்னை,ஜூன் 29

இந்திய ரூபாவின் மதிப்பு வரலாறு காணாத வகையில் நேற்று வீழ்ச்சியடைந்து உள்ளது. அமெரிக்காவின் மிரட்டல் காரணமாக இந்த சரிவு ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு சரிந்து வருகிறது. இது தவிர இந்தியா, சீனா உள்ளிட்ட முக்கிய நாடுகளுடனான அமெரிக்காவின் வர்த்தகப் போரும் சர்வதேச அந்நியச் செலாவணி சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சரிவைச் சந்தித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் 19 ஆம் திகதி அன்று டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு 68.61 என்ற அளவிற்கு சரிந்திருந்தது. இது அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய சரிவாக கருதப்பட்டது. அதன்பின்னர் சிறிது ஏற்றத்தாழ்வுகளுடன் காணப்பட்ட இந்திய ரூபாவின் மதிப்பு நேற்றுமுன்தினம் வர்த்தக நேர முடிவில் 68.61 ஆக நிலைபெற்றது.

ஈரானின் கச்சா எண்ணெய் உற்பத்தியை முடக்கி, அந்த நாட்டை தனிமைப்படுத்த அமெரிக்கா முயற்சித்து வருகிறது. இதன் தொடக்கமாக, கூட்டணி நாடுகள் அனைத்தும் ஈரானிடம் இருந்து நவம்பர் மாதத்திற்குப் பிறகு கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று கூறியிருந்தது. இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் இதில் விதிவிலக்கு கிடையாது என்றும், இதை மீறினால் பொருளாதார தடைகளை சந்திக்க நேரிடும் என்றும் மிரட்டியது. இதனால் கச்சா எண்ணெய் விலை உயரும் என்ற அச்சம் ஏற்பட்டது.

இதுபோன்ற காரணங்களால் டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு கடுமையாக சரிந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழகத்தை போராட்டக் களமாக மாற்ற சில கட்சிகள், அமைப்புகள் முயற்சி!

### முதல்வர் பழனிச்சாமி குற்றச்சாட்டு

தமிழகத்தை சில அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் போராட்டக்களமாக மாற்ற முயற்சித்து வருகின்றன என முதல்வர் கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் காவல், தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்கு பதிலளித்து முதல்வர் பேசியவை வருமாறு:-

மறைந்த முதல்வர் ஜெயலலிதா வழியில் செயல்படும் இந்த அரசு, பல பிரச்சினைகளை திறமையாக சமாளித்து வெற்றி பெற்று வருகிறது. இதைப் பார்த்து, அரசுக்கு நற்பெயர் கிடைத்துவிடுமோ என்ற அச்சத்தில், சிறிய குறைகளையும் பூதாகரமாக்கி அறிக்கைகள் விடுவது, போராட்டங்களை நடத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றமையை ஒருசிலர் தங்கள் தலையாய கடமையாக மேற்கொண்டுள்ளனர். அரசு எடுக்கும் முடிவுகளில் அல்லது



செயல்பாட்டில் ஏதேனும் குறைகள் இருந்தால், அதை அரசின் கவனத்துக்கு கொண்டுவந்தால், அவற்றை பரிசீலித்து குறைகளை களைய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழக காவல் துறையினர் சட்டம், ஒழுங்கை சீரிய முறையில் பராமரித்து வருகின்றனர். மதம் மற்றும் வகுப்பு பூசல் ஏதுமின்றி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக பேணிக் காத்து வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளாக ஒரு சில சம்பவங்களைத் தவிர, பொது மக்களை பாதிக்கும் வகையில், எந்த வொரு சட்டம், ஒழுங்கு பிரச்சினையும் இல்லை. இது, மாநிலத்தில் அமைதி நிலவுவதற்கும் சட்டம், ஒழுங்கு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதற்கும் சான்றாகும்.

காவல் துறையினர் தங்கள் பணிகளை சிறப்பாகச் செய்ய தேவையான ஊக்கத்தை அரசு அளித்து வருகிறது. இதனால், இந்த அரசு மீது குறை கூற காரணம் ஏதுமின்றி, சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்றும், பொது அமைதி பாதிக்கப்பட்டு விட்டது என்றும் உண்மைக்குமாறாகதொடர்ந்து ஊடகங்களில் அறிக்கைகள் வெளியிட்டும், பேட்டிகள் அளித்தும் வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 4 ஆண்டுகளில் 52 நாடுகள் பயணம்; மோடி பயணச் செலவு ரூ.355 கோடி

மோடி பிரதமராகப் பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் அவர் இதுவரை 4 ஆண்டுகளில் 52 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார் என்றும் அதற்கான செலவு 355 கோடி இந்திய ரூபா எனவும் தெரியவந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகிறார்.

அதோடு வெளிநாட்டு முதலீடுகளையும் இந்தியாவுக்கு பெற நடவடிக்கை மேற்கொள்கிறார்.

பிரதமர் மோடியின் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தைக் காங்கிரஸ் தலைவர் ராகுல் உட்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் கிண்டல் செய்தனர். இந்த நிலையில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்களுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது என்பது பற்றிய தகவல்களை தர வேண்டும் என்று பீமப்பா என்பவர் பிரதமர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்திருந்தார்.

அதற்கு பிரதமர் அலுவலகம் பதிலளித்துள்ளது. அந்த பதிலில் இடம் பெற்றுள்ள தகவல்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி கடந்த 4 அண்டுகளில் பிரதமர் மோடி 41 தடவை வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த 41 தடவை பயணத்தின்போது பிரதமர் மோடி 52 நாடுகளுக்கு சென்று வந்துள்ளார். 2014 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் திகதி தொடங்கி சமீபத்தில் இந்தோனே



ஷியா சென்று வந்தது வரை அவரது சுற்றுப்பயணத்தில் இடம்பெற்ற 52 நாடுகள் விவரம் வருமாறு:-

பூட்டான், பிரேசில், நேபாளம், ஜப்பான், இலங்கை, ஜேர்மனி, ஸ்பெயின், ரஷ்யா, பிரான்ஸ், கஜகஸ்தான், போர்த்துக்கல், அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல், சீனா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சுவிற்ஸர்லாந்து, ஜோர்டன், பாலஸ்தீனம், ஐக்கிய அரபு எமிரேட், ஓமான், சுவீடன், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பிஜூ தீவு, செசல்ஸ், மொரிசீயஸ், கனடா, மங்கோலியா, தென்கொரியா, வங்கதேசம், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், அயர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பெல்ஜியம், சவுதிஅரேபியா, ஈரான், கட்டார், மெக்சிகோ, மொசாம்பிக், தென்னாபிரிக்கா, தான்சானியா, கென்யா, வியட்நாம், லாவோஸ், இந்தோனேசியா.

இந்த 52 நாடுகளுக்கும் பிரதமர் மோடி சென்று வந்த வகைக்கு 355 கோடியே 30 லட்சத்து 38 ஆயிரத்து 465 ரூபா அரசுப் பணம் செலவாகியுள்ளது.

# இரட்டைக் குடியுரிமை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

6)தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டமையை செல்லுபடியற்றதாக்கும்படி,

19 ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் யாராவது நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தாலன்றி, அவ்வாறு சட்டமுரணாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கண்டு கொள்ளப்படமாட்டார்களோ என்ற சந்தேக நிலையும் உள்ளது. ஆனால் இது அரசமைப்புக்கு முரணான விடயம் என்பதால் இதில் அரசு நிச்சயம் கவனம் செலுத்தியே ஆகவேண்டும்.

7) இதில் மிகவும் பாரதூரமான விடயம் எது வென்றால், ஒருவர் நாடாளுமன்றத்தில், மாகாண சபையில் அல்லது உள்ளூராட்சிச் சபையில் உறுப்பினராவதற்கு அவர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் என்பது முதன்மையான அடிப்படைத் தேவைப்பாடாக இருந்தும், இலங்கைப் பிரசையாக இல்லாதவர்களும் அத்தகைய பதவிகளில் இருக்கக் கூடிய நிலைமையும் சாத்தியமாகவுள்ளமைதான்.

இது எப்படியென்றால், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற ஒருவர், இலங்கைக்கு வந்து தனது ஊரில் தனது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, வாக்காளர் இடாப்பிலும் பெயரைப் பதிவு செய்து கொள்வார். தனது வெளிநாட்டுக் குடியுரிமையைக் கிடப்பில் போட்டுவிட்டு அவர் இலங்கைப் பிரசையாக வலம்வருவார். ஏதாவதொரு தேர்தலில் வெற்றிபெற்றுப் பதவியிலும் அமர்ந்துகொள்வார்.

அவர் இரட்டைக் குடியுரிமையை எடுக்கவுமில்லை, அதற்கு விண்ணப்பிக்கவும் இல்லை. எனவே அவர் இரட்டைக் குடியுரிமை உள்ளவரா என்று பரிசீலிக்கப்படும்போது, இரட்டைக் குடியுரிமை இல்லாதவர் என்ற பதிலே கிடைக்கும். ஆனால் அவர் இலங்கைக் குடியுரிமை உள்ளவரா என்றால் இல்லை.

எனவே, இலங்கையின் இன்றைய அரசமைப்புச் சட்டத்தின்படி, இரட்டைக் குடியுரிமை விடயம் பலரின் நித்திரையைக் கெடுக்கும் ஒன்றாக இருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பாதிக்கப்படுபவர்கள் அரசியல் பலம் வாய்ந்தவர்களாக இருந்தால் பரிகாரம் தேடுவதில் வெற்றியடையலாம்.

பரிகாரம் என்னவென்றால், 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள இரட்டைக் குடியுரிமையை என்னும் தகைமையீனம் தொடர்பான வரியை, புதிய அரசால் தேர்தல் முறை தொடர்பாக விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்படும் 20 ஆவது திருத்தச் சட்டத் தில் ஒரு சரத்தைச் சேர்ப்பதன்மூலம், பின்னோக்கிச் செயற்படக்கூடிய வகையில்(Retrospective) நீக்கிவிட்டால் அது இந்த இக்கட்டுக்குள்ளானவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

எதுவும் நடக்கும் நமது இலங்கைத் திருநாட்டில் அதுவும் நடக்கலாம். யாருக் குத் தெரியும்?

*

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் மானிப்பாய் சங்கப்பிள்ளை வீதி என்ற இடத்தைச் சேர்ந்த தம்பையா லீலா தேசி (வயது 60) என்பவரே கொலை செய்யப்பட்டவர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

மானிப்பாய் கல்லூரி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் நாகரத்தினம் குமாரசாமி (வயது 88) என்னும் வயோதிபப் பெண் தனிமையில் வசித்து வந்துள்ளார். அவரை பாதுகாப்பதற்கும் பணிபுரிவதற்கும் சங்கப்பிள்ளை வீதியைச் சேர்ந்த 60 வயது பெண்ஒருவர்வீட்டுப்பணிப்பெண்ணாக பணிபுரிந்து வந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அங்கு பிச்சை எடுப்பதற்காக ஒருவர் வந்துள்ளார். அவருக்கு சிறு தொகை பணமும் வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் அவ்வீட்டில் இருந்தவர்களிடம் தண்ணீர் தருமாறு கோரி பிச்சைக்காரன் அங்கேயே நின்றுள்ளார்.

அங்கு நின்ற அவர் திடீரென கத்தியை எடுத்து பணிப் பெண்ணின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதன் பின்னர் அங்கு ஒன்று கூடிய பொது மக்கள் ஆனைக் கோட்டைப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடித்திரிந்த பிச்சைக்காரனை பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டவர் மனநோயாளி என்றும், அவர்தான் இக் கொலைச் சம்பவத்தை புரிந்தார் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுழிபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சுழிபுரம் சந்தியை இடைமறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இன்று மாகாண ரீதியாக பூரண ஹர்த்தாலை மேற்கொள்வதற்கும் அங்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

### வீதியை மறித்து போராட்டம்

நேற்றுக் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கி செல்லும் பிரதான வீதியில் சுழிபுரம் சந்தியில் இப்போராட்டம் ஆரம்பமானது.

அங்கு ஒன்று கூடிய காட்டுப்புலம் கிராமம் மக்கள், அயல் கிராம மக்கள், அப் பாடசாலை மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் எனப் பலர் நாற் சந்தியை முற்றாக முடக்கினர். இதனால் அப் பகுதியூடான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

### போராட்டக்காரர்களின் கோரிக்கை

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கிராமத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் அவை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரினர்.

தமது பிரச்சினைகள் தொடர்பாகக் கூறுவதற்கு மக்கள் பிரதிதிகளும், சிறுவர், பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் போராட்ட இடத்திற்கு வர வேண்டும் எனவும் கோரினர்.

அத்துடன் இச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் யாழ்.மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் இடம்பெற வேண்டும் எனவும், குறிப்பாக வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளும் கற்றல் செயற்பாட்டை ஒரு நாள் நிறுத்தி எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதனையடுத்து காலை பதினொரு மணியளவில் போராட்ட இடத்திற்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகளும் வருகை தந்தனர்.

குறிப்பாக இலங்கைத் தமிழரசுகட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோர் அங்கு வந்தனர்.

இவர்களோடு யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர், சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், வலிகாம் வலயக் கல்வி பணிப்பாளர் ஆகியோரும் வருகை தந்தனர்.

பாடசாலைகளை மூடும் கோரிக்கை தொடர்பாக அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் பதில் அளித்தனர்.

பாடசாலைகளை மூடுமாறு கோருவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை எனவும் அது தொடர்பான அறிவிப்பை மாகாணக் கல்வி அமைச்சரே வெளியிட வேண்டும் எனவும் வலயக் கல்வி பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேபோன்று மாவை சேனாதிராசா எம்.பியும், மாகாண அமைச்சின் கீழேயே பாடசாலைகள் வருவதனால் அவற்றின் கல்விச் செயற்பாட்டை ஒரு நாளைக்கு நிறுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சரே கூற முடியுமே தவிர, தன்னால் அது தொடர்பாக கூற முடியாது என்றார்.

இதேவேளை டக்ளஸ் தேவானந்தா, தாம் இந்த ஹர்தாலுக்கு ஆதரவு தருகிறார் எனவும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் இது தொடர்பாகத் தனது அறிவிப்பை வெளியிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் இம் மக்களது போராட்டத்திற்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்திருந்தனர்.

அங்கு சென்றிருந்த சங்கானை பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் அப்பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கத் தாங்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் எனத் தெரிவித்தனர்.

இக் கொலைச் சம்பவம் நீதிமன்ற வழக்கோடு தொடர்புபட்டிருக்கின்றமையால் தாம் அதில் தலையீடு செய்யவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் சட்டவிரோதச் செயற்பாடுகளை தடுக்க வேண்டும் எனத் தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற இந்த எழுச்சி தொடர்ச்சியாக காணப்பட வேண்டும் எனவும், அதன்படி தமது அலுவலர்களுக்கு இரகசியமான முறையில் மக்கள் தகவல்களை வழங்கும் போது தாம் விரைவாக இந் நடவடிக்கைகளைக் கட்டுபடுத்த முடியும் எனவும் தெரிவித்தனர்.

இப்போராட்டத்துக்கு நேற்று மாகாணக் கல்வி அமைச்சர் நேரில் வருகை தராமை குறித்து அங்கு அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைத் தேர்தலை, தொடர்ந்தும் ஒத்திவைக்க இடமளிக்க வேண்டாமென்று, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, அந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட விதிமுறைகளை, நாடாளுமன்றத்தின் ஊடாக, கூடிய விரைவில் தயாரித்து வழங்குமாறும் வலியுறுத்தினார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சபா நாயகருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையில், நாடாளுமன்றத்திலுள்ள சபா நாயகர் அலுவலகத்தில், நேற்று முக்கியமான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே அவர், மேற்கண்ட விடயங்களை முன்வைத்தார் என அறியவந்தது.

சபாநாயகர் கரு ஜயசூரிய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர், எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

தேர்தலுடன் தொடர்புடைய முக்கிய விடயங்கள் பற்றி இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

மாகாணசபைத் தேர்தலை பழைய மற்றும் புதிய முறைகளின் கீழ் நடத்துவதற்கான சாத்தியம் பற்றியும், எல்லை நிர்ணயம் தொடர்பாகவும், இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அடுத்த மாதம் 5 ஆம்திகதி நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீது விவாதத்தை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய இதன் போது தெரிவித்தார்.

இதன்போது தெரிவிக்கப் படும் கருத்துக்களை கவனத்தில் கொள்ளுமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவரிடம் சபாநாயகர் குறிப்பிட்டார்.

கிழக்கு, வடமத்தி மற்றும் சப்ரகமுவா மாகாணங்களின் பதவிக்காலம் கடந்த செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைந்து ஒரு வருடமாகின்ற நிலையில், அம் மாகாண சபைகளுக் கான தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது குறித்தும், மஹிந்த தேசப்பிரிய, இதன்போது எடுத்துரைத்தார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன், மத்தி, வடமேல் மற்றும் வடக்கு மாகாணசபைகளின் பதவிக்காலமும், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடையவுள்ளதால், மகாணசபைத் தேர்தல்களை உடனடியான நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, சபாநாயகரிடம் அவர் வலியுறுத்தினார் எனக் கூறப்படுகிறது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களை, பழைய முறைமையின் கீழ் நடத்துவதாயின், தற்போதுள்ள தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும். புதிய முறைமையில் அந்த தேர்தல்களை நடத்துவதாயின், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகாண எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவேற்ற வேண்டும். இவ்விரு விடயங் களில் ஒன்றை நிறைவேற்றும் வரையில், தேர்தல்கள் ஆணைக்குழுவால், மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலைமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டங்களில் ஒன்றை எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்குள் நிறைவேற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்தத் தேர்தல்கள் தொடர்பில், தேர்தல் ஆணைக்குழு தன் பாட்டில் சில நடவடிக்கைகள் தீர்மானங்களை எடுத்து நடவடிக்கை மேற் கொள்ளும் என்றும் –

அதற்குத் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அரசமைப்பின் கீழ் சிறப்பு அதிகாரங்கள் உள்ளன என்றும் –

தேர்தல்கள் ஆணையாளர் தேசப்பிரிய சபாநாயகரிடம் தெரிவித்தார் என அறிய வந்தது. (உ)

## சந்தியாவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவியும் பலவந்தமாக காணாமல்போனவர்களிற்காக குரல்கொடுப்பவருமான சந்தியா சமூக ஊடகங்களில் மரணஅச்சுறுத்தல்களையும், துன்புறுத்தல்களையும் மிரட்டல்களையும் எதிர்கொண்டுள்ளார் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

சந்தியா எக்னலிகொட எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்கள் கடும் கவலையளிக்கின்றன என தெரிவித்துள்ள மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி இயக்குநர் தினுசிகா திசநாயக்க அவரிற்கு ஆபத்தை ஏற்படுத்த முயல்பவர்களிற்கு எதிராக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மனித உரிமை பாதுகாவலர்கள் தங்கள் முக்கியமான பணியை சுதந்திரமாகவும் அச்சமின்றியும் முன்னெடுப்பது அவசியம். மனித உரிமை பணியாளர்களை அச்சுறுத்துவதற்கும் துன்புறுத்துவதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

மனித உரிமைகள் மற்றும் நீதிக்காக அமைதியான வழிகளில் பிரச்சாரம் செய்யும் அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய கடமை இலங்கை அதிகாரிகளுக்கு உள்ளது. மனித உரிமை ஆர்வலர்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டியது இலங்கையின் கடமை.

தங்களுக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அதிகாரிகள் சந்தியாவை பாதுகாப்பதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அது அவரின் மனித உரிமையை மீறிய விடயமாக அமையும் எனவும் தினுசிகா திசநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

### 'கார்டியன்' தகவல்

ஸ்ரீலங்கா கார்டியன் என்ற பத்திரிகையின் 25.01.2013 ஆம் திகதியப் பிரதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"சிகல' என்ற சொல் (பாளி மொழியில் சிங்கம்) முதன் முதலில் தென்படுவது தீபவன்ச என்ற நூலில் (கி.பி. 4–5ஆம் நூற்றாண்டுகளில்). இந்த நூலில் 'சிகல' என்ற சொல் லானது ஒரு முறையே தென்படுகிறது. சிங்கம் என்ற சொல்லின் காரணமாகவே இந் தத் தீவு 'சிகல' என்று அழைக்கப் பட்டது. 5ஆம், 6ஆம் நூற்றாண்டு காலத்தைய நூலாகிய மகாவம்சத்தில் 'சிகல' என்ற சொல் இரு முறையே குறிப்பிடப்படுகிறது.

"ஆனால் கிறிஸ்துவுக்கு முன்னைய இராமாயணத்தில் இத்தீவு இலங்கை (லங்கா) என்றே அழைக்கப்பட்டுள்ளது. தீபவன்ச இவ்வாறான சொற்களைப் பாவிப்பதற்கு முன்னர் இலங்கையில் சிங்கள இனம் என்று ஒன்று இருக்கவில்லை. கி.பி. 4 ஆம், 5ஆம் நூற்றாண்டுகளில் கூட பின்னர் சிங்கள மொழி என்று அழைக்கப்பட்ட மொழி வழக்கிற்கு வரவில்லை. தீபவன்ச, மகாவன்ச என்ற நூல்களை அம்மொழியில் எழுதும் அளவுக்கு அம்மொழி வெளி வந்திருக்கவில்லை".

ஆகவே அந்தக் காலத்தில் சிங்களம் பேசாதவர்களை சிங்களவர் என்று அடையாளப்படுத்துவது தவறானது. எனவே இலங்கையின் மூத்த குடிகள் தமிழரே என்பதற்கு தற்போது போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. இது வரை சிங்கள அறிஞர்களால் குறிப்பிட்டு வரப்பட்ட வரலாறு பிழையானது. உண்மையை உள்ளவாறு உரைப்பது தவறாகாது. சினமூட்டுதல் தவறு என்றால் எமது உண்மை வரலாறு எஞ்ஞான்றும் வெளிவராது போய்விடும். சினமூட்டியேனும் உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டும் என்பதே எனது விருப்பம்.– என்றுள்ளது.

## ரூ.20 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவுள்ளன.

இது தொடர்பில் நேற்றுக் காலை மத்திய கடற்றொழில், நீரியல்வளத்துறை அமைச்சு அதிகாரிகள் மற்றும் யூ.என்.டீ.பி அதிகாரிகள் மயிலிட்டி துறைமுகத்தை நேரில் பார்வையிட்டனர். இதன்போது தெல்லிப்பழை பிரதேச செயலர், வலி, வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன் மற்றும் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தில் துறை முகத்தை ஆழப்படுத்துதல், மீன்பிடி படகுகளுக்கான எரி பொருள் நிரப்பு நிலையம் அமைத்தல் மற்றும் மீனவர்களுக்கான மலசலகூடம், குடிதண்ணீர் வசதிகள், தங்குமிட வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான நிதியில் ஐந்து கோடி ரூபாவை நோர்வே அரசு யூ.என்.டி.பி. ஊடாக வழங்கியிருக்கின்றது. எஞ்சிய 15 கோடி ரூபா இலங்கை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறப்படவுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு, யாழ். மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறையிலும், மன்னார் மாவட்டத்தில் உள்ள பேசாலையிலும், இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன.

மண்டைதீவில் படகுகள் நங்கூரம் பாய்ச்சும் தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

மேலும், யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் தலா 8 மீன்பிடித் துறைமுகங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 மீன்பிடித் துறைமுகங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 மீன்பிடித் துறைமுகங்களும், திருத்தப்பட வேண்டியவை என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கட்டுமானம் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் நங்கூரம் பாய்ச்சுமிடத்தின் அபிவிருத்தி, கடல் வளங்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகிய மூன்று விடயங்களின் அடிப்படையில், இந்த திட்டத்துக்கான ஆலோசனைகளை நிறுவனங்களிடம் பெற்றுக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் – கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

# உலக சம்பியனை வெளியேற்றி வரலாறு படைத்த தென்கொரியா



உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட வரலாற்றில் மிகப் பெரிய தலைகீழ் முடிவை ஏற்படுத்தி 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிகொண்ட தென் கொரியா நடப்பு உலக சம்பியன் ஜேர்மனியை முதல் சுற்றுடன் வெளியேற்றியது.



உலகக் கிண்ண வரலாற்றில் ஜேர்மனி முதல் சுற்றுடன் வெளியேறியது இதுவே முதல் தடவையாகும். அத்துடன் ஜேர்மனியை தென் கொரியா வெற்றிகொண்டதும் இதுவே முதல் தடவையாகும்.

ஜேர்மனி வீர்ர்களின் தவறுகளினாலேயே தென் கொரியாவின் இரண்டு கோல்களும் உபாதையீடு நேரத்தில் 3 நிமிட இடைவெளியில் போடப்பட்டன.

கஸான் எரினா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற எவ் குழுவுக்கான போட்டியின் 93 ஆவது நிமிடத்தில் தென் கொரிய அணித் தலைவர் ஹியுங்மின் சன் உதைத்த கோணர் கிக்கை ஜேர்மன் பின்கள வீரர்கள் திசைதிருப்பத் தவறிய அதேவேளை 6 யார் கட்டத்துக்குள் இருந்தவாறு யங்வொன் ரிம் கோலாக்கினார்.

இந்த கோல் ஓவ்சைட் நிலையிலிருந்து பெறப்பட்டதாக உதவி மத்தியஸ்தர் கொடியை உயர்த்தி சமிக்ஞை செய்தார். ஆனால் வீடியோ உதவி மத்தியஸ்தரின் ஒத்துழைப்பை நாடிய ஐக்கிய அமெரிக்க மத்தியஸ்தர் மார்க் ஜீஜர் அந்தக் கோலை அங்கீகரித்தார்.



இதனைத் தொடர்ந்து ஜேர்மனி அணித் தலைவரும் கோல்காப்பளருமான மனுவல் நோயரும் மத்தியவரிசையில் இணைந்து கோல் போடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முற்பட்டார்.

ஆனால் தென் கொரிய எல்லையிலிருந்து உயர்வாக நீண்டதூரம் பரிமாறப்பட்ட பந்தை நோக்கி மூச்சு முட்ட ஓடிய தென் கொரிய அணித் தலைவர் ஹியுங் மின் சன் 96 ஆவது நிமிடத்தில் வெறுமனே இருந்த ஜேர்மன் கோலினுள் பந்தை இடதுகாலால் புகுத்தி தென் கொரியாவுக்கு வரலாற்று முக்கியம் வாய்ந்த வெற்றியை உறுதிசெய்தார்.

சுவீடனிடம் மெக்சிகோ 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் தோல்வி அடைந்ததை அடுத்து இப் போட்டியில் ஒரு கோலினால் வெற்றி பெற்றாலும் இரண்டாம் சுற்றுக்கு செல்ல முடியும் என்பதை நன்கு அறிந்திருந்த ஜேர்மனி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்த் தாக்குதலை நடத்திய அணியாகத் தென்படவில்லை.

ஜேர்மனியின் பந்துப் பரிமாற்றங்கள் ஆமை வேகத்தில் இடம்பெற்றதுடன் பல சந்தர்ப்பங்களில் பின்னோக்கிய நகர்வுகளே இடம்பெற்றன. மேலும் அவ் வணி வீரர்கள் கோல் போட எடுத்த பல முயற்சிகளை தென் கொரிய கோல்காப்பாளர் ஜோ ஹியொன்வூ அசாத்திய திறமையுடன் செயற்பட்டு தடுத்து நிறுத்தி பலத்த பாராட்டைப் பெற்றார்.

ஜேர்மனியின் தோல்வியானது தென் கொரியர்களுக்கு பேரானந்தத்தைக் கொடுத்த அதேவேளை, ஜேர்மனிக்கு தாங்கொணாத் துயரைக் கொடுத்தது.

# தோல்வியடைந்தாலும் இரண்டாம் சுற்றுக்குள் நுழைந்த மெக்சிக்கோ

சுவீடனுக்கு எதிராக எக்கெத்தரின்பேர்க் விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்ற எவ் குழுவுக்கான கடைசி லீக் போட்டியில் 0:3 என்ற கோல்கள் கணக்கில் மெக்சிக்கோ தோல்வி அடைந்தது. எனினும் தென் கொரியாவிடம் ஜேர்மனி தோல்வி அடைந்ததால் எவ் குழுவிலிருந்து சுவீடனுடன் மெக்சிக்கோவும் இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதிபெற்றன.

இரண்டு அணிகளும் போட்டியின் முதலாவது பகுதியில் வெற்றி தோால்வியற்ற முடிவை நோக்கி நகர்வதைப் போன்று தென்பட்டது. ஆனால் இடைவேளையின் பின்னர் சுவீடன் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்த அரம்பித்தது.



24 நிமிட இடைவெளியில் ஒரு பெனல்டி உட்பட 3 கோல்களைப் போட்ட சுவீடன் அமோக வெற்றியீட்டி எவ் குழுவில் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றது.

போட்டியின் 50ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ கோல் எல்லையில் ஏற்பட்ட தடுமாற்றத்தைப் பயன்படுத்தி சுவீடன் பின்கள வீரர் லூட்விக் ஒகஸ்டினசன் முதலாவது கோலைப் போட்டார்.

12 நிமிடங்கள் கழித்து கிடைத்த பெனல்டியை சுவீடன் அணித் தலைவர் கிரான்க்விஸ்ட் கோலாக்கினார். இவர் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் போட்ட இரண்டாவது பெனல்டி இதுவாகும். ஒட்டு மொத்தமாக 24 பெனல்டிகள் இம்முறை வழங்கப்பட்டுள்ளன.

போட்டி 74ஆவது நிமிடத்தைத் தொட்டபோது மெக்சிக்கோ வீரர் ஈ. அல்வாரெஸ் கோல் ஒன்றைப் போட்டுக் கொடுத்தார்.

இது இம் முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் போடப்பட்ட 6ஆவது சொந்த கோலாகும்.

# சுவிற்சர்லாந்து 2ஆம் சுற்றில்



உலகக் கிண்ண இரண்டாம் சுற்றில் விளையாட தகுதிபெறுவதற்கு ஒரு புள்ளி மாத்திரமே தேவை என்பதை அறிந்திருந்த சுவிற்சர்லாந்து, அப் புள்ளியை கொஸ்டாரிக்காவுக்கு எதிரான போட்டியை வெற்றிதோல்வியின்றி (2:2) முடித்ததன் மூலம் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டது மட்டுமல்லாமல் ரஷ்யாவில் முதல் தடவையாகக் கொஸ்டாரிக்கா கோலையும் போட்டது.

முதலிரண்டு போட்டிகளில் போன்றே வேகம் குன்றி காணப்பட்ட சுவிற்சர்லாந்து 31ஆவது நிமிடத்தில் ப்ளெரிம் டிஸெமய்லி முதலாவது கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின்னர் 58 ஆவது நிமிடத்தில் கொஸ்டாரிக்காவின் கெண்டொல்வொஸ்டன் பந்தைத் தலையால் முட்டி அருமையான கோல் போட்டு கோல் நிலையைச் சமப்படுத்தினார்.

போட்டியின் 88 ஆவது நிமிடத்தில் மாற்று வீரர் ஜொசிப் டேர்மிக் கோல் ஒன்றைப் போட்டு சுவிற்சர்லாந்தை மீண்டும் முன்னிலையில் இட்டார். உபாதையீடு நேரத்தில் கொஸ்டாரிக்கா கோல் நிலையை சமப்படுத்தியது.

அநாவசியமாக சுவிற்சர்லாந்து வீரர் ஒருவர் பெனல்டி ஒன்றைக் கொடுத்தார்.

அந்த பெனல்டியை பிறயன் ருய்ஸ் உதைத்த போதிலும் குறுக்குக் கம்பத்தில் பட்டு திரும்பிவந்த பந்து சுவிற்சர்லாந்து கோல்காப்பாளர் யான் சொமரின் தலையில் பட்டு சொந்த கோலாக உள்ளே சென்றது.

காலைக்கதிர் Kalaikkathir



# போதைப்பொருள் பாவனையைத் தடுக்க கட்சி கடந்து இணைந்து செயற்படுவோம்!

## சுழிபுரம் போராட்டத்தில் நேற்று மாவை, டக்ளஸ் தெரிவிப்பு




- எஸ்.நிதர்ஷன் -

வடக்கில் அதிகரித்துள்ள கஞ்சா, மது போதைப் பொருள் பாவனைகளைக் கட்டுபடுத்த அரசியல் கட்சிகள், பொது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கொல்லப்பட்ட ஆறு வயது சிறுமி றெஜினாவின் மரணம் தொடர்பில் நீதி கேட்டு நேற்று வீதி மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. மேற்படி போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடும் போதே இருவரும் இதனை தெரிவித்தனர்.

இங்கு மாவை சேனாதிராசா மேலும் கருத்து தெரிவிக்கையில்–

இச் சம்பவம் அதிர்ச்சி தரும் ஒன்று. ஏன் இக் கொலை இடம்பெற்றது என்பதன் உண்மை இன்னமும் தெரியவரவில்லை. ஆனாலும் இப்போது முன்னெடுக்கப்பட்டுள்ள இப்போராட்டமானது நியாயமானது.

இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களது பிணைக்கான காரணம் தொடர்பில் சட்டத்துறையினர் மீள் பரிசிலனை செய்ய வேண்டும். மேலும் இப் பிரதேசம் உட்பட வடக்கில் பரவியுள்ள கஞ்சா, மது போன்ற போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்த மக்களும் அரசியல்வாதிகளும் இணைந்து செயற்பட வேண்டும். அனைவரது ஆதரவுடனும் செயற்பட்டாலேயே இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

இவை தவிர இப்போதைப் பொருள், சட்டவிரோத மது உற்பத்தி என்பன தொடர்பான பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சட்ட ஒழுங்கு அமைச்சருடனும் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

உங்கள் பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என நீங்கள் கோரிக்கை விடுத்திருந்தீர்கள். இது பெரிய பிரச்சனையல்ல. நாம் இது தொடர்பாக உடனடியாகவே யாழ்.மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபருடன் பேச்சு மேற்கொண்டு பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துத் தருகின்றோம்.– என்றார்.

இதேவேளை டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கையில்–

இப் போதைப் பாவனைப் பிரச்சினை இங்கு மாத்திரம் காணப்படவில்லை. இது தமிழர்கள் வாழ்கின்ற அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. எனவே இதனைத் தடுப்பதற்கு மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு தர வேண்டியமையுடன் அரசியல் கட்சிகளும் கட்சி பேதமின்றி பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்து இப் பிரச்சனைக்கான தீர்வு நோக்கிப் பயணிக்க வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்ற தீர்வே இக் கொல்லப்பட்ட இச் சிறுமிக்கான நீதியாக அமையும்.– என்றார்.

# பாடசாலை முடிந்து பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பப் புதிய நெறிமுறை

## சிறுமி றெஜினாவுக்கான இரங்கல் செய்தியில் கல்வி அமைச்சர் தகவல்

சிறுமியின் கொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவி சிவனேஸ்வரன் றெஜினாவின் படுகொலை தொடர்பாகத் தாம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

சுழிபுரம், காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவி சிவனேஸ்வரன் றெஜினா பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வந்ததன் பின்னர், ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டு, படுகொலை செய்யப்பட்டார். ஆறு வயதுச் சிறு மிக்கு நேர்ந்த இக் கதி மிகுந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த மிலேச்சத்தனமான படுகொலை தொடர்பில் பொலிஸார் விரைந்து செயற்பட்டுக் கொலையாளி களையும், சூத்திதாரி களையும் கைது செய்திருப்பதன் மூலம் தமது கடமையைச் சரிவரச் செய்து கொண்டிருக்கின்றமையை அறியமுடிகின்றது.

இத்தகைய துன்பகரமான சம்பவங்கள், எதிர்காலத்தில் நிகழாது இருக்க, சிறுபிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களின் விழிப்புணர்வு, அவசியமானதாகும்.

எனினும் எதிர்காலத்தில் சிறுவர்களுக்கு இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படுவதைக் குறைக்கக் கூடிய வகையில் வட மாகாணக் கல்வி அமைச்சு தனது வரையறைகளுக்குள், நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த வகையில் வடக்கு மாகாணத்தின், பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில், கல்வி கற்கும் மாணவர்களை, பாடசாலை முடிந்ததும் பெற்றோர்களோ அல்லது பெற்றோர்களினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமிக்கப்பட்டவர்களோ மட்டுமே வந்து அழைத்துச் செல்லவேண்டும் என்ற நடைமுறையைச் செயற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.இது எதிர் காலத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு நடைமுறையாகவும் இருக்கும்.

இவ்வேளையில் இச் சிறுமியின் படுகொலை தொடர்பில், காவல்துறையினர் நடுநிலையுடனும், நீதியாகவும் செயற்பட்டு அனைத்துக் குற்றவாளிகளையும் நீதி மன்றத்தில் நிறுத்தி, உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் கடமையைக் கூடிய விரைவில் நிறை வேற்ற வேண்டும் என வடமாகாணக் கல்வி அமைச்சுக் கேட்டுக் கொள்கின்றது. எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் நிகழாதிருக்கவும், பொலிஸாரினதும்,நீதி மன்றத்தினதும் இக் குற்றவாளிகள் மீதான நடவடிக்கையானது இத்தகையவர்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்க வேண்டும்.

இத் துன்பகரமான சாவைத் தழுவிய சிறுமி,சிவனேஸ்வரன் றெஜினாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.– என்றுள்ளது. (உ)

# கட்சி பேதங்களை மறந்து உழைப்போமாகில் றெஜினாவின் இழப்பே இறுதிப் படுகொலை

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் சமூக நலன்கருதியும் மக்களின் பாதுகாப்பு கருதியும் அனைவரும் ஒன்றுபட்டு உழைப் பதனூடாகவே எமது சமூகத்தில் இன்னொரு றெஜினாவை கொடிய வன்முறைக்கு காவுகொடுக்காது பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அப்பாவிச் சிறுமி றெஜினாவின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று முன்னெடுக்கப்பட்ட மாணவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று எமது மக்களது கலாசாரங்களை சீரழித்தக்கொண்டிருக்கின்ற சமூக சீரழிவுகளை இல்லாதொழிப்பதற்கு மக்களின் ஆதரவும் அவசியம். இவ்வாறான சம்பவங்கள் இனி மேல் நடக்காது என்றும் இதை தொடர்ந்து நடக்க விடக்கூடாது என்றும். அரசியல் ரீதியாக சொல்லப்படுகிறது. ஆனாலும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்கின்றன.


ஆதலால் இவ்வாறான சம் பவங்களை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் இந்தப் போதை பொருள் பாவனையை நிறுத்த வேண்டும். இதில் பொது மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பங்குண்டு. இந்த இரண்டு தரப்புகளும் ஒன்று சேரும் போதே இலகுவாகத் தீர்வுகாணமுடியும்.

ஏனெனில் இது ஒரு பிரதேசத்துக்கு மட்டுமான பிரச்சினை அல்ல. தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்கும் இது நடைபெறுகின்றது. இன்று நடந்தேறியுள்ள றெஜினாவின் கொலையே கடைசியானது என எடுத்துக்கொண்டு இனிமேல் இவ்வாறான சம்ப வங்கள் எங்கும் நடைபெறாது இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்தத் தீர்வுதான் இந்த றெஜினா என்ற குழந்தையின் கொலைக்கு மட்டுமல்லாது இவ்வாறான சம்பவங்களுக்கும் நீண்ட காலத் தீர்வாக அமையும்.

நான் இன்று மத்திய அரசின் முகவராகவும் இருக்கவில்லை. மாகாண அரசின் முகவராகவும் இருக்கவில்லை. அவ்வாறு நான் இன்று இருந்திருந்தால் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வுகளைக் காண்பதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுத்திருப்பேன்.

அந்தவகையில் கட்சிகள் பேதங்களால் அரசியல் காரணங்களை கொண்டதாகப் பிரச்சினைகளை அணுகாது சமூக நலன் கருதி அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் நிச்சயம் தீர்வு காணமுடியும். – என்றார்.

# புலம்பெயர் தேசங்களிலும் பேரணிகள்




காணாமலாக்கப்பட்ட உறவுகளினால் கிளிநொச்சியில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் அடுத்து வரும் நாள்களில் – ஜூலை ஆரம்பத்தில் – 500 நாள்களை எட்டவுள்ள நிலையில் –

அவர்களுக்கு ஆதரவான போராட்டங்கள் நாளை முதல் பிரிட்டன், கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளிலும் முன்னெடுக்கப்படவிருக்கின்றன என அறிவிக்கப்படுகின்றது.

களத்தில் உள்ள உறவுகளுக் காகப் புலம்பெயர்ந்த மக்கள் நடத்தும் இந்தத் தோழமைப் பேரணி தமிழ்க் கனேடிய செயல்வாதிகளை உள்ளடக்கிய சுயாதீனக் குழு ஒன்றினால் முன்னெடுக்கப் படவுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.